பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 09 வெள்ளிக்கிழமை (23-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:58

## இலங்கைக்கு உதவும் நாடுகளின்

# இன்றைய கொழும்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளப் புலிகள் மறுப்பு!

## தம்மைச் சந்தித்து அழைப்பு விடுத்த அகாஷியிடம் தமிழ்ச்செல்வன் காரணத்தை விளக்கிக் கூறினார்

கொழும்பு,ஜனவரி23

இலங்கைக்கு உதவும் நாடுகளின் மீளாய்வுக் கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறுகின்றது. அக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி விடுதலைப் புலிகளுக்கு ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேரில் அழைப்பு விடுத்தார். ஆனால், அழைப்பை ஏற்று கூட்டத்தில் கலந்துகொள்வதற்குப் புலிகள் இயக்கத்தின் சார்பில் அதன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மறுத்துவிட்டார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்த சமயமே அகாஷி இந்த அழைப்பை விடுத்தார்.

கொழும்பில் அரசியல் ஸ்திரமும் ஐக்கியமான அரசுத் தலைமைத்துவமும் இல்லாத இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகள் இத்தகையதோர் கூட்டத்தில் பங்குபற்றுவது தமிழ் மக்களின் மனதிலும் சர்வதேச சமூகத்தின் முன்னாலும் பல்வேறு சந்தேகங்களை உருவாக்கும் என்றும் அகாஷியிடம் தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தினார்.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் கடந்த மார்ச்சில் ரோக்கியோவில் நடைபெற்றிருந்தது. அக்கூட்டத்தின் தொடர் நடவடிக்கையாக - உதவிப்பணிகளில் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்கான - மீளாய்வுக் கூட்டமே இன்று கொழும்பில் நடைபெறவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதில் கலந்துகொள்வதற்காக - இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தின், இணைத் தலைமை

(16ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கிளிநொச்சி வந்த அகாஷியை வரவேற்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

## ஸ்ரீல.சு.க. - ஜே.வி.பி. இடையிலான

## உண்மையான ஒப்பந்தத்தை பகிரங்கப்படுத்த கோருகிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு,ஜன.23

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள இரகசிய ஒப்பந்தத்தை பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்கப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட ஒப்பந்தத்துக்கும், ஜே.வி.பியின் தலைமைகள் வெளியிடுகின்ற கருத்துக்களுக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் உள்ளன என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி. தலைமைகள் தெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நாளை

ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நாளை வெளியிடப்படவுள்ளன.

இந்தப் பெறுபேறுகளை இணையத்தளத்தின் மூலமும் பார்வையிடலாம் என்று பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஏ.எம். விஜயசிறி தெரிவித்தார்.

www.docnets.lk என்ற இணைய முகவரியூடாக பெறுபேறுகளை திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் பார்வையிடலாம்.

## வடக்கு - கிழக்கு தவிர்ந்த

## சகல மாகாண சபைகளும் பெப்ரவரி 9 இல் கலைப்பு

### ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி தேர்தல்

கொழும்பு,ஜன.23

பதவியிலிருந்து வரும் ஏழு மாகாண சபைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி கலைத்து விடுவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஏழு மாகாண சபைகளுக்கும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி ஒரே தினத்தில் தேர்தல்களை நடத்துவதெனவும் அரசும் எதிர்க்கட்சிகளும் இணங்கியுள்ளன.

இத்தீர்மானத்தின்படி, வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய சகல மாகாண சபைகளையும் அவற்றின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரே கலைத்துவிட்டு அவற்றுக்கு ஒரே நாளில் தேர்தல்களை நடத்த வழிசெய்யும் மாகாண சபைத் தேர்தல் சட்டத்துக்கு திருத்தம்கொண்டு வரவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இச்சட்டத்திருத்தத்தை அவசரமாகக் கொண்டு வருவதெனவும் அரசு தீர்மானித்துள்ளது.

மேற்கு, வடமேல், வடமத்தி, தெற்கு, ஊவா, சப்பிரகமுவ, மத்திய ஆகிய ஏழு மாகாண சபைகளையும் உரிய காலத்துக்கு முன்னரே கலைப்பதற்கும் ஒரே நாளில் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கும் மாகாண சபைகள் தேர்தல் சட்டம் திருத்தப்படுவது

(16ஆம் பக்கம் பார்க்க)

## பதவிநீக்கி, பொதுத் தேர்தல் நடத்தினால் 30 ஆசனங்கள் கூடுதலாகக் கிடைக்கும்

### அரசு பின்வரிசை எம்.பிக்களிடம் பிரதமர் ரணில்

கொழும்பு,ஜன.23

சு.க.- ஜே.வி.பி. கூட்டமைப்பின் பெறுபேறாகத் தன்னை பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றி, தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமேயானால் அரசியல் ரீதியில் தாம் அடையும் மிகப்பெரும் வெற்றியாக அது அமையும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அரசாங்கக் கட்சி பின்வரிசை எம்.பிக்கள் சிலருடனான சந்திப்பின் போதே பிரதமர் இவற்றைக் கூறினார்.

அவ்வாறு நடத்தப்படும் ஒரு

(16ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.


அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.

NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி



நேபாளத்தைச் சேர்ந்த 14 பத்திரிகையாளர்கள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள களநிலை குறித்து நேரில் ஆராய்வதற்காக அவர்களின் இந்த விஜயம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. மாற்றுக்கொள்கைகளுக்கான அமைப்பின் ஊடகப் பிரிவுப் பணிப்பாளர் சுனந்த தேசப்பிரிய வும், அவர்களுடன் வருகைதந்திருந்தார். நேற்று மாலை அவர்கள் 'உதயன்' நிறுவனத்திற்கு விஜயம் செய்து ஆசிரியபீட அலுவலர்களுடன் கலந்துரையாடினர்.

சுனந்த தேசப்பிரிய, 'உதயன்' பிரதம ஆசிரியர், நேபாளப் பத்திரிகையாளர் ஆகியோர் கலந்துரையாடலில் ஆழ்ந்திருப்பதனையும் (இடது மேல்), வருகைதந்த பத்திரிகையாளர்களில் ஒரு பகுதியினரையும் (மத்தி) படங்களில் காணலாம். 'உதயன்' நிறுவனத்தினால் அவர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பனம்பொருள் உற்பத்திகளை அவர்கள் ஆர்வத்துடன் உடனடியாக அணிந்து மகிழ்வதையும் காணலாம்.

### கூட்டு ஒப்பந்தம் இனப்பிரச்சினை தீர்வுக்கல்ல

# அரசு-விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தாலேயே கைச்சாத்து பெருவிழா தடையின்றி நடந்தது

### நாடாளுமன்றத்தில் ரவிராஜ் எம்.பி. பேச்சு

கொழும்பு,ஜன.23

நாட்டின் இரு பெரும் கட்சிகள் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டது ஆட்சியைப் பிடிப்பதற்கேயன்றி இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கல்ல - என்று கூட்டமைப்பு எம்.பி. என்.ரவிராஜ் நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ் சாட்டினார்.

இறைவரி திருத்தச்சட்டவிவாதத்தில பேசுகையில் இவ்வாறு குற்றஞ்சாட்டிய அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசிய முன்னணி அரசு புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டதால்தான் கூட்டு ஒப பந்த கைச்சாத்து பெருவிழா தங்கு தடையின்றியும் அச்சமுமின்றி நடை பெற்றது. தெருத் தெருவாக பொங்கல வைத்து மகிழ்ச்சி கொண்டாடினீர்கள்.

டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்தகாலத்தில் யாழ். குடா நாட்டுக்கு கப்பல் மூலம் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. குடாநாட்டு மக்கள் அதிகவிலை கொடுத்து பொருள்



களைக் கொள்வனவு செய்தனர். யாழ். குடாநாட்டுக்கு ஒரு வில்லை பனடோல் எடுத்துக் செல்ல அனுமதிக்கப்பட வில்லை. ஒரு லீற்றர் பெற்றோல் அப்போது 150 ரூபாவாக விற்பனையானது. இப்போது பெற்றோல் 77 ரூபா வாக விற்பனையாகிறது.

நோர்வே, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இலங்கைக்கு வந்து அள்ளிக் கொண்டு போகின்றன என்று கண்ணீர் வடிக்கின்றீர்கள். இவர்களை வரவழைத்தது யார்? நோர்வேயை இலங்கைக்கு வரவழைத்தது எங்கள தலைவி இன்றைய ஜனாதிபதிதான்.

ஜே.வி.பியின் கொள்கை எமது மண்ணை வளப்படுத்தக்கூடியதுதான். ஆனால், அது 50 ஆண்டுகளுக்கு முன்னர் அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

1998ஆம் ஆண்டு நீங்கள் யாழ். குடாநாட்டுக்கான தரை வழிப்பாதையை திறக்க முயற்சித்தீர்கள். நடந்தது என்ன? ஆயினும், ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தாமல் 2001ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டுக்கான தரை வழிப் பாதை திறக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் உயர் பாது காப்பு வலயத்திலுள்ள வயல் காணிகளுக்கு செல்லமுடியாமல் நாங்கள் தவிக்கின்றோம். நீங்கள் இங்கு உர மானியம் குறைக்கப்பட்டு விட்டதென கூச்சல் போடுகின்றீர்கள்.

இன்று வெளிநாட்டவர்கள் இங்கு காணிகளை வாங்கக் கூடியதாகவிருக்கின்றது. முதலீடுகள் செய்கின்றனர். இதனால் இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கின்றது. வெளிநாட்டவர்கள் இங்கு காணி வாங்குவதை நீங்கள் எதிர்க்கின்றீர்கள்.

நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் சமாதானம் ஏற்பட வேண்டும். நாடாளுமன்றத்தில ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டிக் கொள்வதால் எதுவித பயனும் ஏற்படப் போவதில்லை.

எங்களுக்குள்ளே இருக்கின்ற பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால்தான் வெளிநாட்டவர் இதில தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டது. மொத்தத்தில் வெளிநாட்டவரை நாங்களே வரவழைத்தோம். இதுதான் யதார்த்தம்

- இவ்வாறு அவர் கூறினார்.

## கல்முனை மாநகரசபைத் தேர்தலில் மு.காவுக்கு எதிராக பெரும் போட்டியிராது

### சுயேச்சை அணிகளுக்கு பெரும் கட்சிகள் ஆதரவளிக்குமா?

கொழும்பு,ஜன.23

எதிர்வரும் பெப்ரவரி 21ஆம் திகதி அம்பாறை கரையோரப் பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் கல்முனை மாநகர சபையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கைப்பற்றக்கூடிய வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது.

கல்முனை மாநகரசபைத் தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் அங்கு முஸ்லிம் காங்கிரஸு"க்கு எதிரான பலமான சக்தி தேர்தல் களத்தில் இல்லை.

சுதந்திரக் கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி ஆகியன தேர்தலுக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கவில்லை. இவ்வாறான காரணங்களினால் முஸ்லிம்களின் வாக்குகளை முஸ்லிம் காங்கிரஸ் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் நிலையுள்ளது.

முஸ்லிம்கள் சார்பான ஓரிரு சுயேச்சைக்குழுக்களும் தமிழ் வேட்பாளர்களைக் கொண்ட ஒரு சுயேச்சை அணியுமே கல்முனை மாநகரசபைத் தேர்தல் களத்தில் இருக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் பிளவு படுவதற்கு முன்பே தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதால் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான அஷ்ரப் காங்கிரஸ் அணியைச சேர்ந்தவர்களும் மு.கா.வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுகின்றனர்.

இதனால் அதாவுல்லா அணியைச சேர்ந்த வேட்பாளர்களை மு.கா.வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கிவிடுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகிறது.

இது இவ்வாறிருக்க, கல்முனை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற சுயேசசை அணிகளில் ஒன்று ஐ.தே.க., நு.ஆ., அஷ்ரப் காங்கிரஸ் மற்றும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த சுயேசசை அணியை ஐதேக சார்பான வேட்பாளர்களைக் கொண்டு தேர்தலைச் சந்திப்பதற்கு அக்கட்சியின் உள்ளூர் முக்கியஸ்தர்கள் விரும்புகின்றனர் எனவும் அதற்கான புரிந்துணர்வுப் பேச்சுக்கள் விரைவில் இடம்பெறும் எனவும் கூறப்படுகிறது.

## புத்தளத்தில் மு.கா. அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

புத்தளம்,ஜன.23

இன்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குப் பின்னர் புத்தளத்தில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெறுமென முஸ்லிம் காங்கிரஸ் புத்தள மாவட்ட மத்திய குழு இணைச்செயலாளர் எம்.ஆர்.அயூர்தீன் தெரிவித்தார்.

புத்தளம் நகரசபைத் தலைவர் பதவியை முஸ்லிம் காங்கிரஸு"க்கு வழங்குவதை ஐ.தே.க. முன்னணி அரசு தொடர்ந்து இழுத்தடிப்பு செய்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

மாதங்கள் பல கடந்தும் ஐ.தே.க. பொதுச் செயலாளர் சரத் கப்புக் கொட்டுவ எமக்கு உறுதியளித்தவாறு இது வரை முஸ்லிம் காங்கிரஸு"க்கு தலைவர் பதவிவழங்கப்படவில்லை தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகிறோம். இதனைக கண்டித்தே இன்று ஆர்ப்பாட்டம் இடம் பெறுமென அவர் மேலும் தெரிவித்தார். (ம)

### இந்திய உதவி ஒப்பந்தம் இன்று கைச்சாத்து

நகர, கிராம தோட்டப்புறங்களில் வாழும் குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் தமது புதிய வீடமைப்புக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கென 300 கோடி ரூபா பெறுமதிமிக்க 37 லட்சம் கல்வனைஸ் கூரைத் தகடுகள விநியோகிக்கப்படவுள்ளன. இந்தியாவினால் வழங்கப்படும் கடனுதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டாம் கட்ட இலங்கை - இந்திய திட்டத்தின்கீழ் 80 கோடி ரூபா பெறுமதியாக 20 லட்சம் கூரைத் தகடுகள் இம்முறை பெறப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் இன்று 23ஆம் திகதி பிப. 2 மணிக்கு கொழும்பு, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைத் தலைவர் மேஜர் சரத் முனசிங்காவும் இந்திய அரசின் அதிகாரியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

## மோ.சைக்கிள் திருடினார் என்று முகமாலையில் ஒருவர் கைது

மோட்டார் சைக்கிள் திருடிய நபர் ஒருவர் முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். அவரை பெப்ரவரி மாதம் 6ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 19ஆம் திகதி யாழ்ப்பாணம், சுண்டிக்குழி வீதியில் வெற்றிவேல் இரத்தினம் என்பவரது வீட்டில் ரி.வி. எஸ்.விக்ரர் மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி, வீடியோ கசட், றெக்கோடர் மற்றும் அலுமாரிக்குள் இருந்த பணம், நகை ஆகியவற்றைத் திருடினார் என்றும் -

மோட்டார் சைக்கிளுடன் நேற்று முகமாலைச் சோதனைச் சாவடியைக் கடக்க முற்பட்டபோது முகமாலைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பொலீஸார் இவரை யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இத விக்னராஜா உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் மாதம் தனது மோட்டார் சைக்கிளை பலாத்காரமாகக் கொள்ளையடித்தார் என்று இவரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்று அரியநாயகம் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருடியது தொடர்பாக இவரை பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி மல்லாகம் நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் யாழ். நீதிபதி தெரிவித்துள்ளார். (ம-7-74)

## ஆயுதங்களுடன் வான் மட்டக்களப்பில் சிக்கியது

கொழும்பு,ஜன.23

மட்டக்களப்புப் பகுதியில் ஆயுதங்களுடன் கைவிடப்பட்ட வானொன்று பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட வானொன்றிலேயே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் மட்டக்களப்பு மயிலம்பாவெளி பகுதியில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த இந்த வானில் ஒரு ரீ-56 ரக துப்பாக்கி, எம்.9 ரக கைத்துப்பாக்கி மற்றும் ரவைகளும் காணப்பட்டன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விற்கும் நோக்குடன் வான் கடத்தி வரப்பட்டிருக்கலாமென பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

வாகனத்தை கடத்திவந்த நபர்கள் தமது நோக்கம் நிறைவேறாததால் அதை கைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் இருவர் ஏறாவூர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

### 1,000 ஆசிரியர் சேர்ப்பு போட்டிப் பரீட்சை:

## திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகுமென அறிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியா பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் நோக்கில் ஆயிரம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை தொடர்பாக திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்று வெள்ளிக்கிழமை வெளியாகின்றது.

இதுபற்றி கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் ஏ.திசாநாயக்க, இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவத்துக்கு அறிவித்துள்ளார்.

ஜீ.சி.ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரம் பேரைப் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆசிரியர்களாக நியமிப்பதற்கான பழைய வர்த்தமானி அறிவித்தலில் பல்வேறு குறைகள் காணப்பட்டன. இதனை தமிழர் ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுசென்றது.

புதிய வர்த்தமானி அறிவித்தலின படி, முன்னர் கொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த போட்டிப்பரீட்சை, வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடை பெறவிருக்கிறது.

அதேபோன்று, முன்னர் நான்கு பாடங்களுக்காகவே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புதிய அறிவிப்பின் படி மேலும் ஏழு பாடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் விண்ணப்ப முடிவு திகதி 2004 ஜனவரி 31வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இவைதவிர மேலும் சில மாற்றங்களும் புதிய வர்த்தமானியில் இடம்பெற்றிருக்கின்றன என கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## அம்பாறை கரையோர தேர்தல் பணிகள் ஆரம்பம்

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் எதிர்வரும் பெப்ரவரி 21ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மாவட்ட அரசாங்க அதிபரும் உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான அபேவீர ஹேரத் மேற்கொண்டு வருகின்றார்.

இதன் முதற்கட்டமாக தேர்தல் உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச திணைக்களங்கள் மற்றும் காரியாலயங்களுக்கு இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

கல்முனை மாநகர சபைக்கும், சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில், திருக்கோவில் ஆகிய ஆறு பிரதேச சபைகளுக்கும் பெப்ரவரி 21ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது.

## சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றால்

# பாலசிங்கத்திற்கு சிகிச்சையளிக்க முன்வந்த வாஜ்பாய் மீது நடவடிக்கை எடுப்பீர்களா?

## நீதிமன்றத்தில் வைகோ காரசாரமான வாதம்

சென்னை,ஜனவரி23

**சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றால், விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் சிறுநீரகப் பிரச்சினைக்கு சிகிச்சையளிக்க முன்வந்த பிரதமர் வாஜ்பாய் மீது நடவடிக்கை எடுப்பீர்களா? - இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, 'பொடா' நீதிமன்றில் காரசாரமாக வாதிட்டார்.**

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக 'பொடா' சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள வைகோவின் பிணை மனு மீதான விவாதம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

வைகோவின் பிணை மனுவை எதிர்த்து அரச தரப்பில் எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனுவைப் படித்துப் பார்க்க நீதிமன்றம் வைகோவுக்கு அரை மணி நேரம் அவகாசம் வழங்கியது. அந்த மனுவை வாங்கிய வைகோ, அதை படித்துப் பார்த்து பின்னர் தனது வாதத்தைத் தொடங்கினார். அப்போது, அரசு தரப்பில் இதுவரையில் ஆஜராகி வந்த சட்டத்தரணி ஜெயக்குமார் வைகோவின் பிணைமனு மீதான விசாரணையில் தான் ஆஜராகவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார். தனக்குப் பதிலாக அரச தலைமைச் சட்டத்தரணி ஆஜராவார் என்றும் தெரிவித்தார். இருப்பினும் வைகோ தனது மனு மீது தானே ஆஜராகித் தனது தரப்பு வாதத்தை வைத்தார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

எனது வாழ்நாளில் நான் தாக்கல் செய்துள்ள முதல் பிணைமனு இதுதான். நான் 2002ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது, என் மீது வழக்குத் தொடரப்பட்டு இருப்பது குறித்து தகவல் வந்தது. இதையடுத்து நான் உடனடியாக சென்னை திரும்பினேன். அங்கே என்னைக் கைது செய்தார்கள். பின்னர் நான் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டேன்.

2002ஆம் ஆண்டு திருமங்கலத்தில் நடத்தப்பட்ட கூட்டம், ம.தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. எங்கள் அமைப்பின் 9ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் வகையில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் நான் பேசும்போது விடுதலைப் புலிகள் குறித்துப் பேசினேன் என்று குற்றஞ் சாட்டப்பட்டேன். புலிகள் தவிர வேறு பல வரலாறுகளையும் நான் பேசினேன். அத்துடன் தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் நலன்கள் குறித்தும் பேசினேன். கடந்த 40 ஆண்டுகளாக நான் பொது வாழ்க்கைக்கு வந்ததில் இருந்து இந்த நாட்டையும் மக்களையும் நான் நேசித்து வருகிறேன்,



திருமங்கலம் கூட்டத்தில் நான் பேசும்போது இலங்கையில் துன்பப்படும் தமிழர்களுக்காக போராடும் விடுதலைப் புலிகளை ஆதரிக்கின்றேன் என்றும் பேசினேன். அப்போது நேற்றும் அவர்களை ஆதரித்தேன், இன்றும் நான் அவர்களை ஆதரிக்கிறேன், நாளையும் ஆதரிப்பேன் என்று தெரிவித்தேன். இதையே திருமங்கலம் கூட்டத்தில் நான் மக்களிடம் எடுத்துக்கூறினேன்.

விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் ஒரு தளம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று பேசவில்லை. அவர்களுக்கு நிதி திரட்டுவது, அவர்களுக்கு ஆதரவு திரட்டுவது என்று எதுவும் கூறவில்லை. அது போன்ற காரியங்களிலும் ஈடுபடவில்லை. இலங்கையில் உள்ள தமிழர்களுக்காக போராடும் ஓர் அமைப்பு விடுதலைப் புலிகள் இயக்கம்தான். இலங்கையில் வாழும் தமிழர்கள் வன்முறையை எதிர்த்து துப்பாக்கி எடுத்தார்கள். விடுதலைப் புலிகளின் அமைப்பை பிரிட்டன், ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐநா. போன்றவை ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு இன்று அந்த அமைப்பு வளர்ந்துள்ளது.

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவில் என் பேச்சுப் பற்றி குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ள வாசகத்தில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு திரட்டும் வகையிலும் அவர்களை ஊக்குவித்துப் பேசினேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் அவர்களை ஊக்குவித்துப் பேசவில்லை. அதேபோல், புலிகள் விடயத்தில் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைக் கண்டித்துப் பேசினேன் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதில் அமைதிப் பேச்சுவார்த்தை நடக்கும் இந்த நேரத்தில் இப்படி ஒரு கொடுமையான தீர்மானம் போட வேண்டுமா?, என்றுதான் பேசினேன். சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் சரியா? தவறா? என்று கருத்து கூற ஜனநாயக நாட்டில் எனக்கு உரிமையுள்ளது.

இது குறித்து தமிழகத்தில் பிரபலமான ஒரு பத்திரிகை கருத்துக் கணிப்பு நடத்தி செய்தி வெளியிட்டு இருந்தது. அதில் 57 சதவீதம் பேர் 'தவறு' என்று தெரிவித்திருந்தார்கள் என்றும் செய்தி வெளியிடப்பட்டது. இந்த 57 சதவீதம் பேருக்கு 'பொடா' சட்டம் பொருந்துமா? அதேபோல், அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வந்த விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, அவருக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலையில் இந்தியாவில் சிகிச்சை வழங்கக் கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கு சிலர் வேறு விதமான சர்ச்சையைக் கிளப்பினர். இந்நிலையில் பிரதமரிடம் பத்திரிகையாளர்கள் அன்ரன் பாலசிங்கம் பிரச்சினை குறித்துக் கேட்டனர். அதற்கு பிரதமர் வாஜ்பாய், மனிதாபிமான அடிப்படையில் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்தார். சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்று எடுத்துக்கொண்டால் பிரதமர் மீது நடவடிக்கை எடுப்பீர்களா?

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவில் இந்தியாவின் பாதுகாப்புக்கு நாங்கள் மிரட்டல் விடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர். நாங்கள் அமைதியை விரும்புபவர்கள். என்னைக் கைது செய்தபோது தமிழகத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடந்ததா? பஸ்கள் எரிக்கப்பட்டனவா? என்னுடைய கடந்தகால நடத்தை குறித்து தவறா அரசு தரப்பு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் எங்கள் கட்சி அமைதியான வழியில்தான் வளர்ந்து வந்துள்ளது. நான் பேசிய பேச்சுக்கள் எந்த வகையிலும் வன்முறையைத் தூண்டவில்லை. கிட்டத்தட்ட 557 நாள்கள் சிறையில் இருந்த பிறகு இப்போது நான் பிணைகேட்டு விண்ணப்பித்துள்ளேன்.

இந்நிலையில் அரசு தரப்பில் கால அவகாசம் கேட்கிறார்கள். நான் முதலில் மனுதாக்கல் செய்தபோது எனக்கு 5 நாள்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்று எனது மனுமீது விவாதம் நடத்த அரசு தரப்பில் நீண்ட நாள்கள் எடுத்துக் கொண்டனர். மேலும், இப்போது அரச சட்டத்தரணிக்குப் பதிலாக தலைமைச்சட்டத்தரணி ஆஜராவார் என்று தெரிவித்து 27ஆம் திகதி வரையில் கால அவகாசம் கேட்கிறார். இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனது இந்தக் கோரிக்கையை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்து எனக்குப் பிணை வழங்கவேண்டும்.

- இவ்வாறு அவர் ஆவேசமாகப் பேசி முடித்தார்.

இதையடுத்து இன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று 'பொடா' நீதிபதி ராஜேந்திரன் தெரிவித்தார். இத்துடன் காலையில் தொடங்கிய விசாரணை முடிந்து உணவு இடைவேளைக்காக நீதிமன்றம் கலைந்து பின்னர் மதியம் தொடங்கியது. அப்போது அரசு தரப்புச் சட்டத்தரணி ஜெயக்குமார் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அந்த மனுவில் தலைமைச் சட்டத்தரணி உடல் நிலையைக் காரணங்காட்டி 27ஆம் திகதிக்கு கால அவகாசம் கேட்கப்பட்டது. இதை 'பொடா' நீதிபதி ஏற்றுக்கொண்டு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு வைகோவின் பிணை மனுமீதான அடுத்த கட்ட விசாரணையை ஒத்தி வைத்தார்.

# சவூதி இளவரசர் அப்துல் பின் துர்க்கி வீட்டுக் காவலில் இருப்பது அம்பலம்!

ரியாத்,ஜன.23

சவூதி அரேபிய இளவரசர்களின் ஒருவரான சுல்தான் பின் துர்க்கியை, அந்த நாடு கடந்த ஜூன் மாதம் முதல் வீட்டுக் காவலில் வைத்திருக்கிறது. ஆனால், தற்போதுதான் இது குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜெனீவாவில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்துகொள்ளச் சென்றதற்காகவே இவருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

சவூதியில் ஜனநாயக மீளமைப்பை மேற்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காகவே அவர் ஜெனீவாவில் நடைபெற்ற மாநாட்டுக்குச் சென்றிருந்தார். இது குறித்து,"சவூதி அரசின் மீது சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று மாநாட்டில் அவர் கோரிக்கை விடுக்கவிருந்தார். ஆனால், அதற்கு முன்னரே அங்கிருந்து அவர் கடத்தப்பட்டிருக்கிறார்.

இவரைச் சந்தித்த பி.பி.சி. செய்தியாளரே இந்தத் தகவலை அம்பலப்படுத்தியுள்ளார்.

மன்னர் பாத்தின் மருமகன்களில் ஒருவரான இளவரசர் அப்துல் பின் துர்க்கி, தான் கடத்தப்பட்டமை குறித்து விசனமும் தெரிவித்திருக்கிறார்.

ஜெனீவாவுக்குச் சென்ற இவரை அங்குள்ள மன்னர் பாத்தின் அரண்மனைக்கு வரும்படி மன்னரின் மகன் இளவரசர் அப்துல் அஸிஸ"ம், இஸ்லாமிய விவகார அமைச்சர் ஷலா அல்ஷேக்கும் அழைத்திருக்கின்றனர்.

இந்த அழைப்பை ஏற்று அங்கு சென்ற இவரிடம் சில நிமிடங்கள் உரையாடிவிட்டு மேற்படி இருவரும் அங்கிருந்து சென்றுவிட்டனர். சில நிமிடங்களில் இவர் இருந்த அறைக்குள் நுழைந்த முகமூடி அணிந்த ஐந்து பேர் இவருக்கு மயக்கமூட்டி, இவரை சவூதிக்குக் கடத்தி வந்துள்ளனர்.

"நான் கடத்தப்பட்டதற்கு இளவரசர் அப்துல் அஸிஸ"ம், இஸ்லாமிய அமைச்சருமே திட்டம் தீட்டியிருந்தனர்" என அடித்துக்கூறுகிறார் இளவரசர் அப்துல் பின் துர்க்கி.

சவூதியில் நடக்கும் ஊழல்களை வெளிச்சம் போட்டுக் காட்டவே முனைந்தேன் என்றும், ஆனால், மன்னர் குடும்பம் தன்னைக் கடத்தி வீட்டுக் காவலில் வைத்திருக்கிறது என்றும் இவர் கூறியிருக்கிறார்.

மன்னர் குடும்பத்தின் பார்வையில் இவர் வேண்டப்படாதவராகவே இருந்து வருகிறார் என்று இவரைச் சந்தித்த பி.பி.சி. செய்தியாளர் கூறியிருக்கிறார்.

# ஈரானில் அரசியல் கலகம்: அமைச்சர்கள் இராஜினாமா!

ஈரானில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலுக்கான புதிய விதிமுறைகள் குறித்து அங்கு அரசியல் கலகம் ஏற்பட்டிருக்கிறது. தகுதியற்ற ஆயிரக்கணக்கான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என்று அரசு மீது கடும் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. இதன் விளைவாக, அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

புதிய விதிமுறைகளின்படி, சட்டசபைத் தேர்தல்களில் தகுதியற்ற ஆயிரக்கணக்கான வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். இது சீர்திருத்தவாதிகளுக்கு விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

தேர்தல்களில் தகுதியற்றவர்கள் வெற்றியீட்டினால், அது நாட்டை குட்டிச்சுவராக்கி விடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால், சட்டசபைத் தேர்தல்கள் சுதந்திரமானதாகவும் போட்டிக்குரியதாகவும் இருக்கும் என்று அந்நாட்டு ஜனாதிபதி முஹமட்கடாமி அறிவித்துவிட்டார்.

இதனால் ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையே கருத்துபேதம் ஏற்பட்டிருந்தது. அது தற்போது முற்றி, அமைச்சர்களின் இராஜினாமாவில் முடிந்திருக்கிறது.

துணை ஜனாதிபதியும், அமைச்சர்களும் இணைந்து ஜனாதிபதியின் தேர்தல் விதிமுறைகளைக் கண்டித்துள்ளனர். அத்துடன், ஜனாதிபதியின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் கூடிய அமைச்சர்களும், துணை ஜனாதிபதியும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர். அப்போது, ஜனாதிபதி அங்கு இருக்கவில்லை. அவர் தற்போது சுவிட்சர்லாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கின்றார்.

தமது இராஜினாமாக் குறித்து துணை ஜனாதிபதி முஹமட் அலி அப்தகி கூறுகையில்:-

தகுதியற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்க்கும் முகமாகவே நாம் இராஜினாமாச் செய்திருக்கின்றோம். அத்துடன் தேர்தலைப் புறக்கணிப்புச் செய்வதெனவும் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜனாதிபதி கடாமி இது குறித்துக் கூறுகையில்:-

தகுதியற்ற வேட்பாளர்கள் குறித்த விவரங்கள் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தேர்தல் விதிமுறைகளில் எனது சகாக்களும் நாலும் ஒரே இலக்குடன் செயற்பட திடசங்கற்பம் பூண்டிருக்கிறோம் - என்று தெரிவித்திருக்கிறார்.

எனினும், தேர்தல் விதிமுறைகள் மாற்றப்படாத பட்சத்தில் அங்கு அரசியல் கலகம் மேலும் தீவிரமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணகம்
27
-
03
-
1932



விண்ணகம்
25
-
12
-
2003

### அந்தோனிப்பிள்ளை அமிர்தநாதன் (அமுதம்)

"உயிர்ப்பும் உயிரும் நானே - என்னில்
விசுவாசம் கொள்பவன் என்றுமே வாழ்வான்"

யேசு பிறப்பு நாளில் எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசியிலும் துயரத்தில் பங்கு கொண்டு, இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாளை (24.01.2004) சனிக்கிழமை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நண்பகல் 11 மணிக்கு நடைபெறும் திருப்பலியிலும் தொடர்ந்து எமதில்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*
(27503) (24-34-16)

தகவல்: **மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

## வலயரீதியாக லயன்ஸ் கழகங்கள்

We Serve

மல்லாகம்/தெல்லிப்பழை - திருநெல்வேலி வட்டம்/இணுவில்
மானிப்பாய் வட்டம் - யாழ்ப்பாணம்
இணைந்து நடத்தும்

### விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாம்

காலம்: **25.01.2004 (ஞாயிறு) காலை 8.00 மணி (மு.நே.)**
இடம்: **ஏழாலை மேற்கு மகா வித்தியாலயம்**
(மல்லாகம்/குப்பிளான் றோட்)

கண் பரிசோதனை மேற்கொள்பவர்:
*யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர்*
வைத்திய கலாநிதி **S.குகதாசன்** அவர்கள்

விழிவெண்படலத்தால் (கற்றாக்) பாதிப்புள்ளவர்களை மட்டும் பரிசோதனை செய்து (கற்றாக்) சத்திரசிகிச்சை செய்துகொள்ள வேண்டியவர்களுக்கு யாழ். போதனாவைத்தியசாலையில் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும். அத்துடன், கண்ணாடிவில்லை தேவைப்படின் பெற்றுக்கொடுக்கப்படும்.

குறிப்பு: *முகாமிற்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகைதந்து ஏழாலை/குப்பிளான்/மல்லாகம் மற்றும் வலி. வடக்கில் மீளக்குடியமர்ந்து வாழும் குறிப்பாக நலிவுற்றவர்களையும் முதியோரையும் பயன்பெற வேண்டுகின்றோம்.*

லயன் டாக்டர் K.குணராஜா
வலயத் தலைவர்-வலயம் 01.

லயன் டாக்டர் நவமலர் கனகரட்ணம்
பிராந்திய தலைவர் பிராந்தியம் 08.

லயன் டாக்டர் K.இராஜரேட்ணம்
மாவட்டத் தலைவர்
(கண்ணிற்கு முதலிடம்) மாவட்டம்: 306B.

லயன் S.S.தங்கராஜா
மாவட்ட இணைப்பாளர் (வடக்கு).
மாவட்டம்: 306B.

(C/32577)(34-24-16)

---


**eTouch COMPUTER SYSTEM**
"The right way to touch IT"
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P.: 0214-590222 E-Mail: etouch@wow.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலை நேர (4.00 p.m. to 7.00 p.m.) வகுப்புகள் ஆரம்பம்.

**Diploma in MS Office**
**Diploma in Computer Programming**
**Diploma in Desktop Publishing**
**Diploma in Multimedia**
**Diploma in Hardware**

காலம்
3 மாதங்கள்

- புதிதாக கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனி பற்றி முழுமையாக அறிந்துகொள்ளும் **Diploma in PC Handling (Online class)** பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்!!!
- **GIT** பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர **(3.30 to 4.30)** கற்கை நெறி - **Diploma in Information Technology.**
- இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான **(Sri Lanka Computer Driving Licence - SLCDL)** வகுப்புகள்.

இன்று முதல் அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

*DIRECTOR*

**eTouch COMPUTER SYSTEM**
"The right way to touch IT"
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P.: 0214-590222 E-Mail: etouch@wow.lk

(27488) (24-34-16)


---

## பிரான்பற்றில் முன்பள்ளி கட்டடம் திறப்பு

சண்டிலிப்பாய்,ஜன.23

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட பிரான்பற்று ஸ்ரீமுருகன் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரான்பற்று மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவி செல்வி ந.வசந்தா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம், மானிப்பாய் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை பொறுப்பாளர் பவநீதன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

(ஒ-135)

## தொல்புரத்தில் பரஸ்பரசகாய சங்கக் கூட்டம்

சுழிபுரம், ஜன.23

தொல்புரம், மூளாய் ஐக்கிய பரஸ்பரகாய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது. . (ஒ-28)

---

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பேட்டுக்குஞ்சுகள் விற்பனை. காலம் 25.01.2004 ஞாயிறு பி.ப.2.00 மணி. பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு:
**நோதேன் பாம் பிறைவேற் லிமிட்டேட்**
ஆடியபாதம் வீதி.
கல்வியங்காடு.

(27500) (34-24-16)

---

## அறிவித்தல்

**மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்**

வழ. இல.: நானா/84

1. கந்தையா துரைசிங்கம்,
சிவன் கோவில் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

- வழக்காளி

எதிர்.

1. அம்பலவாணர் தில்லைநாதன்,
சிவன் கோவில் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.
2. கந்தையா இராசதுரை,
சிவன் கோவில் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.
3. சரவணமுத்து சுப்பிரமணியம்,
11ஏ, முதலாவது சப்பல் ஒழுங்கை,
கொழும்பு - 06.
4. நீலப்பிள்ளை மயில்வாகனம்,
வரனன், அச்சுவேலி.

- எதிராளிகள்.

வழக்காளி ஆவரங்கால் சிவன் கோவில் மறுநாமம், நடராசராமலிங்க சுவாமி கோவிலில் வருடா வருடம் ஆனி மாதத்தில் நடைபெறும் சிவன் பட்ச திருவிழாவின் முதலாம் நாள் திருவிழாவான கொடியேற்றத் திருவிழாவை வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூரைச் சேர்ந்த திரு.கதிர்காமு சின்னத்துரை உடன் இணைந்து பகல் வேளையும், இரவு வேளையும் நடத்தி வருகின்றார். அவ்விருவரும் இணைந்து பொறுத்து தங்கள் பணத்திலும் தங்களுடன் 1983 இல் இணைந்தவர்கள் தாம் விரும்பி கொடுக்கும் தொகையையும் சேர்த்து 1983ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டு வரை சுயாதீனமாக நடத்தி வந்தனர். இது பற்றி தற்போது இந்நீதிமன்றில் வழக்கு நடைபெறுகிறது.

இந்நீதிமன்றம் 21.11.2003இல் குடியியல் நடைமுறைச்சட்டக் கோவை 16ஆம் பிரிவிற்கமைய வழக்காளி நடவடிக்கை எடுக்கவேண்டும் என கட்டளையிட்டதற்கமைவாக இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது. இவ்வாலயத்தில் வழிபடுவோர் எவராயினும் இவ்வழக்கில் கட்சிக்காரராக சேர விரும்பும் பட்சத்தில் 30.01.2004ஆம் திகதி மன்றில் தோற்றி, கட்சிக்காரனாகச் சேர்வதற்குரிய நடவடிக்கை எடுக்கலாமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வரைவு
எஸ்.என்.விஸ்வலிங்கம்,
வழக்காளியின் சட்டத்தரணி.
21.01.2004

து.சிறிமோகன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(27497) (24-34-16)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையின் பிரதம எழுதுநர்
திருமதி செந்தில்மலர் முருகதாஸ் அவர்களின் கணவர்

### ச.முருகதாஸ் (ஆங்கில ஆசிரியர்)

அவர்கள் 20-01-2004 காலமானதையிட்டு அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை
பருத்தித்துறை.
(27501)(21-24-16)

*சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள்.*

---


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்







**உத்தியோகபூர்வ முடிவுகள்**
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2320937 இருந்து
2338375 வரை
*சீட்டிழுப்பு இல. 1472*
திகதி 21.01.2004

### வெற்றி எண்கள்

**38 39 41 50 54**

போனஸ் எண் **04**

### ஜக்பொட் பரிசு
**ரூபா.1,500,000/-** வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 101 | 10,000/- | 1,010,000/- |
| 3 | 5,451 | 500/- | 2,725,500/- |
| 2 | 90,769 | 20/- | 1,815,380/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 38ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 111,224 | 10/- | 1,112,240/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,463,120/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.1,500,000/-**

தொடர் இல. 3292148க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 24ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**2337942-5-95**
**2329083-1-83**
**2329529-9-43**
**2330772-3-26**
**2323315-7-57**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

உதயன்

## தெற்கின் போக்கில் திருத்தம் தேவை

தற்போதைய அரசியல் நெருக்கடிகளின் பின்னணியில் தமிழர் தரப்பிலிருந்து நேற்றுமுன்தினம் வெளிப்படுத்தப்பட்ட மூன்று பக்கக் கருத்துக்கள் அவதானிக கப்பட வேண்டியவை.

✳ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வீ.பிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் சமாதான விரோத அரசியல ஒப்பந்தம் மீண்டும் இனப்போர் வெடிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கும் என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் எச்சரித்திருக்கின்றார்.

✳ சமாதான முயற்சிகளை இழுத்தடிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு, தமிழ்மக்கள் மீது மீண்டும் யுத்தம் திணிக்கப்பட்டால், சிங்களப்பேரினவாதம் பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று புலிகளின் மட்டு.- அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரி.ரமேஷ் எச்சரித்திருக்கின்றார்.

✳ சிங்களத் தலைமைகளுக்கு இடையிலான அரசியல் அதிகார இழுபறி, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிக்குத் தடையாக இருக்குமாயின், தமிழ்மக்கள் தமது அபிலாஷைகளைத் தனி வழியில் சென்று அடைவதற்கான தார்மீக உரிமைக்கு சர்வதேச சமூகம் பக்கபலமாக இருக்கவேண்டும். - இப்படி ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷியிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைத்திருக்கின்றது.

- இவை தமிழர் தரப்பிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட மூன்று முக்கிய கருத்துக்கள்.

தென்னிலங்கையில் அரசியல் அதிகாரத்தைக் கைபபற்றுவதற்காக சிங்களத் தலைமைகளிடையே ஏற்படும போட்டாபோட்டி சிறுபான்மையினரான தமிழ்பேசும் மக்களை நசுக்குவதில்தான் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது என்பது காலங்காலமாக இடம்பெற்றுவரும் யதார்த்த நிகழ்வாகும். அதுவே இப்போதும் நடைபெறுகின்றது.

அஹிம்சை ரீதியில் - அமைதி வழியில் - ஈழத் தமிழர்கள் தமது உரிமைக்காகப் போராடிய காலத்தில், தென்னிலங்கைப் பேரினவாதத்தின் இந்தப் போக்கு அவற்றுக்கும் நாட்டுக்கும் பெரிய பாதிப்பைத்தரவில்லை. ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல.

அஹிம்சை வழி பலன் தராது என்பதை யதார்த்தத்தில் புரிந்துகொண்டுள்ள தமிழர்கள் முள்ளைமுள்ளால எடுக்கத் தயாராகிவிட்டனர். இத்தகைய சூழ்நிலையிலும் தமது பழைய பல்லவியைச் சிங்களத் தலைமை கைவிடத் தயாரில்லைப்போல் தெரிகின்றது. தமிழர்களின் உரிமைகளை மறுத்து - அவர்களை நசுக்கி, அடக்கி ஒடுக்குவதில் தீவிரம் காட்டி - பேரினவாதப் போக்கை வெளிப்படுத்தினால் தெற்கில் செல்வாக்கைப் பெற்றுவிடலாம் என்று கருதி, அதில் முனைப்பாக ஈடுபட முயல்கின்றது - ஈடுபடுகின்றது - சிங்களப் பேரினவாதம். ஆனால், அதன் விளைவு மிகமிக மோசமாகவே போய்முடியும் என்பதைத்தான் தமிழர் தரப்பு இப்போது முன்னெச்சரிக்கை அறிவிப்பாக முன் வைத்து வருகின்றது.

இலங்கையின் இனப்பூசலுக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு காண்பதற்கு முட்டுக்கட்டை போடுபவர்கள், முரணாக நிற்பவர்கள், குழப்புபவர்கள் யார் என்பதை சர்வதேச சமூகம் அடையாளம் காணும் வாய்ப்பான சூழ்நிலை உருவாகியிருப்பது தான் தமிழர் தரப்புக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் சாதகமான அம்சமாகும்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் சுட்டிக காட்டுவது போல, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற புதிய பதாகையின் கீழ் சிங்கள - பௌத்த பேரினவாத சக்திகள் மீண்டும் ஐக்கியப்பட்டு ஒன்று திரள்வது கண்கூடாகின்றது.

இந்த உண்மை நிலையை சர்வதேச சமூகம் நன்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தப் புறச்சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, தமிழா தேசியக் கூட்டமைப்பு குறிப்பிடுவது போல தமிழ்மக்கள் தமது அபிலாஷைகளைத் தனி வழி சென்று அடைவதற்கான அவர்களின் தார்மீக உரிமைக்கு சர்வதேச சமூகம் பக்கபலமாக நிற்க முன்வரவேண்டும்.

தென்னிலங்கைச் சிங்களச் சமூகம், தனது பேரினவாதப் போக்கைக்கைவிட்டுத் தன்னைத் திருத்திக் கொண்டு, நீதியான - முன் நிபந்தனை ஏதுமற்ற - தமிழர்களின் தனித்துவத்தை அங்கீகரிக்கின்ற - முறையிலான அமைதி முயற்சிகளுக்கு இணங்கி வருவதற்கு முன்வரவேண்டும்.

இல்லையேல், புலிகளின் மட்டு, - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரி.ரமேஷ் எச்சரித்திருப்பது போல அரசும், நாடும் பாரிய விளைவுகளை - விபரீதங்களை - எதிர்நோக்க வேண்டி நேருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே, நிலைமையைப் புரிந்துகொண்டு தென்னிலங்கை தன்னைத் திருத்திக் கொள்வது நல்லது.

---

கட்டளைத் தளபதியுடனான சந்திப்பில்

# அனுகூலங்கள் அதிகம் கிட்டவில்லை; ஆனால் சாதகமான சமிக்ஞை கிடைத்தது!

## வலி.வடக்குப் பிரதேச செயலர் தெரிவிப்பு

தெல்லிப்பழை,ஜன.23

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியுடனான சந்திப்பில் அனுகூலங்கள் அதிகம் கிடைக்கவில்லை.

ஆனாலும், சாதகமான சமிக்ஞைகள் கிடைத்துள்ளன.

வலி.வடக்குப் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில சந்திரபால, வலி.வடக்குப் பிரதேச மக்கள் பிரதிநிதிகளையும், அப்பகுதி அரச அதிகாரிகளையும் நேற்றுமுன்தினம் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்புக் குறித்தே வலி.வடக்குப் பிரதேச செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பலாலிப் படைத்தளத்திலிருந்து 600 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் மக்கள் மளக்குடியமர அனுமதிக்கப்படுவார்கள் என்றே எதிர்பார்த்தோம். ஆனால், அதனைத் தம்மால் உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாது என கட்டளைத் தளபதி தெரிவித்துவிட்டார். ஆனாலும கூட, சில விடயங்களில் சாதகமான சமிக்ஞைகளை அவர் வழங்கியுள்ளார். இந்தச் சந்திப்பில் சிலவிடயங்கள் தொடர்பாக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

600 மீற்றர் பகுதிக்குள் தமது சொந்த வீடு, காணிகளைக் கொண்டுள்ளோர் அவற்றைக் கிராம அலுவலர் ஊடான உறுதிப்படுத்தலுடன் சுத்தஞ்செய்து பராமரிக்கமுடியும். கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு தினந்தோறும் ஒரு காவலாளியும், சுத்திகரிப்புத் தொழிலாளியும் பகல்வேளையில் சென்று கடமைகளில் ஈடுபட அனுமதிகிடைத்துள்ளது. தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகக் கட்டடத்தை புனரமைக்கவும், தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையில் மண்டும் உணவகம் ஒன்றை நடத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இளவாலை, பன்னாலை, அளவெட்டி ஆகிய பகுதிகளிலிருந்து தெல்லிப்பழைக்கு கடமையாற்ற வரும் அரச ஊழியர்கள் கூட்டுறவுச சங்கப் பணியாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் இளவாலை, தெல்லிப்பழை வீதிவழியாக தெல்லிப்பழைச் சந்தியூடாகப் பயணஞ்செய்ய விண்ணப்பித்தால் அனுமதி கிடைக்கும் என்று வாக்குறுதி படைத்தரப்பால் வழங்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய 600 மீற்றர் பகுதிக்கு வெளியிலுள்ள இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகளை மேற்கொள்ளப் படையினர் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. இவற்றை சாதகமான சமிக்ஞைகளாகக் கருதமுடியும்.

- என்றார் பிரதேசசெயலர். (ஒ-150)

---

# இராணுவ வலயம் தொடர்பான விவரம் யாழ்.செயலகத்தால் திரட்டப்படுகிறது

தென்மராட்சி,ஜன.23

யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்கள், வெடிபொருள்கள் காணப்படும் இடங்கள் ஆகியவை தொடர்பான விவரங்களை பிரதேச ரீதியாகத் திரட்டும் பணியில யாழ். செலயகத்தினார் ஈடுபட்டுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களாக உள்ள இப்பரப்பு, அங்கு உள்ள பொதுக் கட்டடங்கள் மற்றும் பாடசாலைகள், வைத்திய சாலைகள், வணக்கஸ்தலங்கள், அரச அலுவலகங்கள் பௌதிக பண்பாட்டு அம்சங்கள், தடைசெய்யப்பட்ட வீதிகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தொகை ஆகியவற்றுடன் தனியாருக்குச் செந்தமான வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், தொழில் நிலையங்கள், சிறுதொழில் நிலையங்கள், விவசாய நிலங்கள், தொழில் இழந்தவர்கள், வீடுகளை இழந்த குடும்பங்கள், தற்போது உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருப்போர் போன்ற விவரங்களே திரட்டப்பட்டு வருகின்றன.

கண்ணிவெடி தொடர்பான பாதிப்புக்கள், கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள இடங்களின் வரைபடம், பரப்பளவு ஆகியவற்றையும் இராணுவமுகாம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு வெளியே உள்ள குடும்பங்கள் தொடர்பான விவரங்களையும் யாழ்.செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகமபோல் சகல பிரதேசசெயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (ஒ-8-117)

---

# எழுதுமட்டுவாழ் பாடசாலையை மீள இயக்கக்கோரி ஆர்ப்பாட்டம்!

கொடிகாமம்,ஜன.23

எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறுகோரி எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை கல்வித்திணைக்களம் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த எழுதுமட்டுவாழ் வடக்கு மக்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலை உள்ள பகுதியை கடந்த 3 வருடகாலமாக இராணுவத்தினர் பயன்படுத்தி வருகின்றனர். கடந்த ஆண்டில் இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டனர். ஆயினும், பாடசாலைக் கட்டடம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இருந்து வருகின்றது. இதனால் இந்தப் பாடசாலை மாணவர்கள் மிருசுவில் றோ.க.த. பாடசாலையில் இணைந்து கல்விகற்று வந்தனர். தற்போது இந்தப் பாடசாலைக்கு மக்கள் சென்றுவரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் பாடசாலையை ஆரம்பிக்கக் கோரி இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் கல்வித் திணைக்களத்திற்கும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் மகஜர்களை அனுப்பினர். ஆனால், பாடசாலையை மீள இயக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே, எதிர்வரும் 29ஆம் திகதி கல்வி திணைக்கள அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை இப்பகுதி மக்கள் மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில், இந்தப் பாடசாலையை படித்த மகளிர் திட்டத்தில் உள்ள பண்ணையாளர் விடுதியில் நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகின்றது. (ஒ-74)

---

# யாழ்.மாவட்டத்தில் விரைவில் மழைநீர் சேகரிப்புத் திட்டம்

## அமையப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

மழைநீரைச் சேமிக்கும் திட்டம் யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையப் பணிப்பாளர் திருமதி தனுஜா ஆரியரத்னா.

யாழ்.குடாநாட்டில் மழைநீரைக் குடிதண்ணீராக மாற்றிப் பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மழைநீர் சேகரிப்பு அமையத்தின் இணைப்பாளர் பி.எஸ். ஏ.சுஜித் செரோமன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் ஸ்ரீ சக்திவேல், நிர்வாக அலுவலர் எஸ். சோதிநாதன் உட்பட நிறுவனப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தனுஜா ஆரியரத்தன மேலும் தெரிவித்ததாவது:-

இயற்கையின் 'நன்கொடையாகக் கிடைக்கும் மழைநீரைச் சரியான முறையில் சேமித்துப் பயன்படுத்த வேண்டும்.

அதற்கேற்ற வகையில் மழைநீரைச் சேமிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். குறிப்பாக, மாத்தளை, பதுளை, அநுராதபுரம் மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் தற்போது இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

அடுத்த கட்டமாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய எட்டு மாவட்டங்களிலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதனை நடைமுறைமுறைப்படுத்துவதன் மூலம் சமூக, பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

நாட்டின் சனத்தொகை வருடந்தோறும் அதிகரிக்கிறது. அதற்கு ஏற்ப குடிதண்ணீர்ப் பாவனையும் அதிகரிக்கின்றது. அதுமட்டுமல்லாது, கடற்கரையோரங்களில் உள்ள கிணறுகள், நீர்த் தேக்கங்கள் உவர்நீர்த் தன்மை கொண்டவையாக மாறிவருகின்றன. இதனால் எதிர்காலத்தில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. இதனைத் தவிர்க்கும் முகமாகவே மழைநீர்ச் சேமிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2010ஆம் ஆண்டளவிலேயே இத்திட்டம் முற்றுமுழுதாக நிறைவேற்றப்படும். இதற்கு சுமார் 8ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது 350கோடி ரூபாவிற்குரிய வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் திருகோணமலை தவிர்ந்த ஏனைய இடங்களில் நீர்த்தேக்கங்கள் இல்லை. இப்பிரதேசங்களில் நீர்த்தேக்கங்களை உருவாக்கி மழைநீரைச் சேமிப்பதே எமது முக்கிய நோக்கமாகும் - என்றார் அமையப் பணிப்பாளர்.(ஒ-5)

---

**நாளை**

தை 10
சனிக்கிழமை
(24.01.2004)
திதி : திருதியை
இரவு 11.54 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
காலை 6.51 வரை
சுபநேரம்: 3.36-5.06
ராகுகாலம்: 9.36-11.06
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

வார்த்தைகள் இதயத்தில் இருந்தே வரவேண்டும்.

# எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக
உதவியாளர் தரம் - 03இல்
ஆட்சேர்ப்பதற்கான எழுத்துத்தேர்வு

எதிர்வரும் 24-01-2004 ஆம் நாள் சனிக்கிழமை
காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை.

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

உரிய பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளையில் தங்களது பெயர் விவரங்களைப் பார்வையிடலாம்.

(சி-32891) (26-21-19-16)

*மேலாளர்,*
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.


# கண்ணீர் அஞ்சலி



அமரர்
## முருகர் கந்தையா
*(நில அளவைத் திணைக்களம், வவுனியா)*

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*லண்டன்.* (27464) (24-14-16) **கமலன் கவிதா.**

# மரண அறிவித்தல்கள்

## முருகர் கந்தையா
(நில அளவைத் திணைக்களம் - வவுனியா)

வரணியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் கந்தையா 19.01.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் சாருலதா, சுபாஜினி (லண்டன்), நிருபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகுமார் (பிரான்ஸ்), ரவீந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகன், சிவா ஆகியோரின் அன்புப் பேரனும் வேலாயுதம், இராஜரட்ணம், நடராஜா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிராமணந் தோட்டம்,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.* (27463) (24-14-16)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்.

## பொன்னையா இராமச்சந்திரன்

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராமச்சந்திரன் அவர்கள் 17.01.2004 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா பொன்னையா (ஆசிரியர்) - வள்ளிப்பிள்ளை பொன்னையா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும் மேரியின் (லண்டன்) அன்புக் கணவரும் டானியல் (லண்டன்), அன்றூ (லண்டன்), நற்றாலி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காகுந்தநாதன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கமலலோஜினி, கமலநாதன் (கனடா), சிறீராகவன் (நியூஸிலாந்து), வனிதரதி (லண்டன்), வைகுந்தவாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2004) சனிக்கிழமை லண்டனிலுள்ள சுரேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இடைக்காடு,*
*அச்சுவேலி.* (27470) (24-14-16)

தகவல்:
பே.நடராசா.

## திருமதி அருந்ததி செல்வராஜா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்ததி செல்வராஜா நேற்று (2004.01.22) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - புவனேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புதல்வியும் நடராஜா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்ற செல்வராஜாவின் அன்பு மனைவியும் சூரியகுமாரன், உருத்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மசீலன் (பொறியியலாளர், வீ.அ.திணைக்களம், திருகோணமலை), சிவராஜமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், இ.போ.ச.), காலஞ்சென்றவர்களான சிவராசா, குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரதிதேவி, சுசிலாதேவி, சத்தியவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவதர்சினி, சுதர்சன், சகீலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2004.01.23) வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மணியகாரன் லேன்,*
*கொக்குவில்.* (27467) (24-14-16)

தகவல்:
செ.சூரியகுமாரன்
(மகன்).

## சுகாதாரப் பரிசோதகர்கள் நியமனம்

யாழ்.சுகாதாரப் பிராந்தியத்தில் கடமையாற்றுவதற்காக மூன்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இம்மாதம் முதல் திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு ஜி.சதீஸ், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு ரி.கண்ணதாசன், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு கே.சுதாகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-135)

## தென்மராட்சியில் பாம்புக்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சியில் அண்மைக் காலங்களில் பாம்புக் கடிக்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி தர்மக்கேணிப்பகுதியில் மாடுகளை மேய்ப்பதற்குச் சென்ற சுந்தரம்பிள்ளை ஆலாலசுந்தரம் என்பவர் (வயது22) பாம்பினால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை -

கடந்த சனிக்கிழமை மிருசுவில் கெற்பேலிப் பகுதியில் தோட்டத்திற்கு நீர் இறைக்கச் சென்ற சந்தணம் கெங்கம்மா (வயது-56) என்பவரும் பாம்பினால் கடியுண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-8-117)

## புனித மரியாள் வித்தியாலயத்தில் பொங்கல் விழா

யாழ். புனித மரியாள றோ.க. வித்தியாலயத்தில் (O.L.R) தரம் ஒன்றில் மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வைபவமும், பொங்கல் விழாவும் கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் எம்.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ் அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை வண.பிதா ம.இ.பயஸ் அடிகள், உதவிப் பங்குத்தந்தை வணபிதா ம.தசரத் ஜீவன், அடைக்கல அன்னை ஆலய மேய்ப்புப் பணிச்சபைச் செயலாளர் ஏ.ஸ். அகஸ்ரின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டார்கள்.

யாழ். புனித மரியாள் றோ.க.வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் 37 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர் என வித்தியாலய அதிபர் எம்.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார். (ஒ-51)


### திருமண சேவை

எம்மிடம் நீங்கள் விரும்பியபடி உங்களுக்கு ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர். புதிதாக திருமணம் முடித்த, முடிப்பவர்களுக்கும் *"வாழும் வழி ரகசியங்கள்"* வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**யோகா பயிற்சி நிலையம்**
மாஸ்டர் வளவு.
வட்டுவினி அம்மன் வீதி.
(27475) இணுவில் மேற்கு. (26-24-12-16)



# அர்ச்சகர் தேவை

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்கை அம்மன் தேவஸ்தானத்துக்கு அர்ச்சகர் ஒருவர் தேவை.
தகுந்த வேதனம் வழங்கப்படும்.
நேரில் பேசித் தீர்மானிக்கலாம். உடனே வரவும்.

- தர்மகர்த்தா,
(27442) (26-16-14-32) சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானம்.


# ...லாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 10 - 1925



உதிர்வு 03 - 02 - 2003

## திருமதி தயாநிதி அமரசிங்கம்

திதி 23.01.2004

ஆண்டு ஒன்று ஆயிடினும்
ஆறுதில்லை எம் இதயம்
ஈண்டு உங்களை நினைத்தே வாழுகின்றோம்.
*ஆத்மசாந்திக்காக வேண்டுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*புங்கன்குளம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(27477)(35-24-14-16)

# மரண அறிவித்தல்

## திருப்பதி ஞானரத்தினம்

யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், வவுனியா பிரதி சுகாதார அத்தியட்சகர் காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவருமான திருப்பதி ஞானரத்தினம் அவர்கள் நேற்று (22.01.2004) வியாழக்கிழமை அதிகாலை 2 மணிக்கு சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மட மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் முரளீதரன் (நோர்வே), ஞானேஸ்வரி (வவுனியா), டாக்டர் கிரிதரன் (கனடா), டாக்டர் ரஜனி (வவுனியா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சபாபதி, பூரணம், நேசரட்ணம், காலஞ்சென்ற தர்மரத்தினம், விஜயரத்தினம், செல்வரத்தினம் (வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி), தவரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் டாக்டர் மு.மகேந்திரன் (வவுனியா வைத்தியசாலை), ராக்கினி (நோர்வே), தியாகினி (கனடா), கி.குகதாசன் (பொறியியலாளர் நெக்கோட், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும தெய்வேந்திரத்தின் (அபி.என்ஜினியரிங், வவுனியா) சிறியதந்தையும் பிரசாந், பிரசன்னா, சம்பிரதா, கவிசேஷன், கௌரி, வருண், தார்மீகன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.99, மன்னார் வீதி, வவுனியாவில் உள்ள அவரின் இல்லத்தில் நேற்று (22.01.2004) வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.தி.செல்வரத்தினம் (சகோதரன்),
(C/32574)(34-24-14-16) வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.

# நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி

12 ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு

தோற்றம் 03 - 07 - 1930



மறைவு 24 - 03 - 1992

தோற்றம் 29 - 04 - 1937



மறைவு 23 - 01 - 2003

## அமரர் சின்னப்பு நவரத்தினம்

## திருமதி நவரத்தினம் இராசமணி

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் மனம் நிறைந்த அன்பின் தாய் தந்தையரே!
நீர் தந்த இவ்வுலகில் நாம் வாழ வழிசெய்து
உம் பிரிவைத் தந்ததினால் கலங்குதையோ
எம் நெஞ்சம்!

நவரத்தினம் சிறீஸ்கந்தராசா,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

(27443)(34-24-14-16)

- குடும்பத்தினர்.

# பொலித்தீன் பாவனையைத் தடைசெய்ய வலி.தென்மேற்குப் பிரதேச சபை முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.23

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் - 'பொலித்தீன்' பாவனையை முற்றாகக் கட்டுப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பகிரங்க அறிவித்தலை வலி.தென்மேற்கு பிரதேசசபைச் செயலாளர் பி.விக்டர் வெளியிட்டுள்ளார்.

இதன்கீழ் வலி.தென்மேற்கில் உள்ள பொது இடங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், விளையாட்டு மைதானங்கள், பொழுதுபோக்கு இடங்கள் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதேசமயம், பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த வலி. தென்மேற்குப் பிரதேசசபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி ஆகியோருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - திண்மக் கழிவுகளால் ஏற்படும் அபாயம் மற்றும் நோய்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொளளப்படவுள்ளன.

பொலித்தீனுக்கு மாற்றுப் பொருள்களின் உற்பத்தி தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருகிறது. (ஒ-185)

# ஆஞ்சநேயர் ஆலயத்தின் புனரமைப்புப் பணி துரிதம்

வலி.தெற்கு,ஜன.23

மருதனார்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் இராஜகோபுர கட்டடப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோபுரக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்தவுடன் இராஜகோபுரக் கும்பாபிஷேகம் விரைவில் இடம்பெறவுள்ளது. சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் முகப்புப் பகுதி பூங்கன்றுகளால் அலங்கரிக்கப்படுகிறது. ஆலயத்தின் முகப்புப் பகுதியில் தாமரைத் தடாகங்கள், கிருஷ்ணர்சிலை, கீதாவுபதேசம் சிலை போன்றன அமைக்கப்பட்டு வருகின்றன. (ஒ-152)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதி

அச்சுவேலி,ஜன.23

ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமைபுரிந்தவர்கள் தாம் கடந்த வருடம் கடமையாற்றிய பாடசாலைகளில் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்தினர். இதனையடுத்து, அவர்களது கோரிக்கை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கல்வி அமைச்சு உறுதி வழங்கியுள்ளது. இந்தநிலையில், கடந்தவருடம் கடமையாற்றிய ஆசிரியர்கள் அவர்கள் கடமை புரிந்த பாடசாலைகளில் இந்த வருடம் தொடர்ந்து கடமை புரிவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் மூன்றாம் தவணையில் பாடசாலைக் கடமையைப் பகிஷ்கரித்துப் போராட்டம் நடத்திவந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மீண்டும் தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கடமையாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-11)

# பாடசாலை செல்லாத பிள்ளைகள் கற்றலைத் தொடர நடவடிக்கை

வலி.தெற்கு,ஜன.23

கட்டாயக் கல்வித் திட்டத்தின் கீழ் ஐந்து வயது தொடக்கம் 14 வயது வரையான பிள்ளைகள் பாடசாலை செல்லாது அல்லது இணைந்த கல்வியைத் தொடராது இருப்பின் அவர்களை இனங்கண்டு கல்வியைத் தொடரச் செய்வதற்கான முன்னெடுப்புக்களை வலயக் கல்வி அலுவலங்கள் மூலம் செயற்படுத்த முறைசாராக் கல்விப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

கிராம அலுவலர்கள், சமுர்த்தி உதவியாளர்கள், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருடைய ஒத்துழைப்பைப்பெற்று இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதிக்கு முன்பாக பாடசாலைகளில் கட்டாயக் கல்விக் குழுக்களை அமைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்கள்.

கட்டாயக் கல்விக் குழுவில் அதிபர், உப அதிபர், பகுதித் தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பனவற்றின் உறுப்பினர்கள், கிராம சேவையாளர், சமுர்த்தி உதவியாளர், நலன்விரும்பிகள், மதகுருமார், சிரேஷ்ட மாணவர் தலைவர் ஆகியோர் என பத்துப் பேர் இடம்பெறுவர்.

பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளை உயர்தர மாணவர் மூலம் இனங்காணமுடியும் என்றும் -

உயர்தர மாணவர்களின் ஆய்வுகள், ஒப்படைகளுக்கு இச்செயற்றிட்டத்தை முதன்மைப்படுத்தமுடியும் என்றும் -

பாடசாலை பெற்றோர், ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் இச்செயற்பாட்டை வலியுறுத்துமாறும் -

பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஒ-152)

# யாழ். பஸ் நிலையச் சூட்டுச் சம்பவம்: சந்தேக நபருக்கு பிணை மனு நிராகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ். பஸ் நிலையப் பகுதியில் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த சிறுவன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது சந்தேக நபரின் பிணை மனு யாழ். நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

அண்மையில் யாழ். பஸ் நிலையப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் படுகாயம் அடைந்தனர். இது தொடர்பாக யாழ். நகரப் படையணியைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை கடந்த செவ்வாயன்று யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இடம்பெற்றது.

சந்தேகநபர் சார்பாக மன்றில் ஆஜரான இராணுவச் சட்டத்தரணி கப்டன் குறூப், சந்தேக நபரைப் பிணையில் செல்ல அனுமதிக்கக் கோரும் பிணை மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

பிணை மனுவை ஆராய்ந்த மேலதிக நீதிவான், குறிப்பிட்ட சந்தேக நபர் அண்மையில் யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் குற்றவாளியாக அடையாளம் காட்டப்பட்டமையால் அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது என்று தெரிவித்ததுடன் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை -

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 2 படையினரைப் பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதி அளித்தபோதும் இதுவரை அவர்களைப் பிணை எடுக்கப் படை அதிகாரிகள் முன்வரவில்லை எனவும் - அவர்கள் இருவரும் தொடர்ந்தும் விளக்கமறியலிலே உள்ளனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-5)

## 25ஆயிரம் ரூபா கொடுப்பனவு

சண்டிலிப்பாய்,ஜன.23

வன்னியிலிருந்து வந்து மீளக் குடியமர்ந்தவர்களுக்கான 25ஆயிரம் ரூபா கொடுப்பனவு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி மூலம் இவ்வாரம் 560பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. சங்கத்தின் மாதகல் கிராமிய வங்கி மூலம் அப்பகுதியிலுள்ள குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (ஒ-135)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.23

இந்து கலாசார அமைச்சின் யாழ. பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு நல்லூரில் உள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும்.

இந்து கலாசார அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய அதிபர் க.ஆனந்தராஜா 'பாடும் பணி' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழி வாற்றுவார். (-8)

## இலவசச் சீருடைக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்து

வலி.தெற்கு,ஜன.23

முதலாம் வகுப்பில் இவ்வருடம் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளுக்குரிய இலவச சீருடைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை கிராம சேவையாளர்களிடம் உடனடியாக நிரப்பி ஒப்படைக்குமாறு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் பெற்றோர்களுக்கு அறிவித்துள்ளார்.

புதிதாக இவ்வருடம் முதலாம் ஆண்டில் சேர்ந்த பிள்ளைகளுக்கு இலவச சீருடைகள் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து பாடசாலை அதிபர்களின் கையொப்பத்தைப் பெற்றுக் காலதாமதமின்றி கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் பெற்றோர்களுக்கு வலியுறுத்தியுள்ளார். (ஒ-152)

## ஊழியர் நலன்புரி சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.23

தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதால் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஊழியர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-6-75)


## வழிபாடு ஆரம்பம்

குருநகர்,ஜன.23

ஊர்காவற்றுறை மேற்கு வீதியில அமைந்துள்ள புனரமைப்புச் செய்யப்பட்ட புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலியுடன் வழிபாடு ஆரம்பமாகின்றது.

ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை அருட்திரு.ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் பீடத்தை ஆசீர்வதித்து திருப்பலியை நிறைவேற்றுவார். இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்த வண. பிதா சாள்ஸ் கொலின் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-51)

# தெய்வீக ஸ்தலங்களில்



தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயத்துக்கு சுமார் மூன்றரை லட்சம் ரூபா செலவில் சித்திரத்தேர் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அந்தத் தேரில் சுவாமி வீதிவலம் வரும் காட்சி இது. (ஒ-10)



வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் விஜயஞ்செய்த தமிழ்நாடு தர்மபுர ஆதீனம் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் அருளாசியுரை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஒ-10-28)



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் அண்மையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தப்பட்ட சற்குரு ஸ்ரீதியாகராஜா சுவாமிகளின் ஆராதனை மற்றும் தமிழ் இசைவிழாவில் கலந்துகொண்டு நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (ஒ-180)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வின் போது புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி மாணவிகள் இசை அர்ச்சனை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (ஒ-72)

# இறைவனுடன் வாழும் முறை!

இறைவனை சதா சர்வகாலமும் மனதில் நிறுத்தி வேலைசெய்தவாறு இருந்தால் வேறு எந்த நினைவுகளுக்கும் மனதில் இடமில்லாமற்போகும்.

சதா சர்வகாலமும் இறைநினைபபு இருப்பதென்பது முதலில் முடியாத காரியமாகத் தோன்றலாம். ஆனால், பத்து நிமிடங்கள் கண்களை மூடி மனதை வலுக்கட்டாயமாகச தெய்வ உருவத்தில் நிறுத்துங்கள்.

முதல் நாள் பத்து நிமிடங்கள், இரண்டாவதுநாள் பதினைந்து நிமிடங்கள், மூன்றாவது நாள் இருபது நிமிடங்கள் என்று நேரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டு போனால் நாளடைவில் சதா சர்வகாலமும் பகவானிடத்தில் நிற்க மனது பழக்கப்பட்டுவிடும்.

அப்போது எந்த இடத்தில் இருந்தாலும், எந்த வேலை செய்தாலும் மனம்மட்டும் பகவத் ஸ்மரணையிலேயே இருக்கும்.

நாம் தான் நம் இந்திரியங்களுக்கு எஜமானர்கள், இந்திரியங்கள் நம் வேலையாள்கள், வேலையாள்களுக்கு எஜமான் அடிமையாகலாமா? உங்கள் வேலைக்காரர்களுக்கு நீங்கள் அடிமையாவீர்களா? அது போலவே இந்திரியங்களுக்கும் அடிமையாகாதீர்கள். அவற்றை உங்கள் வயப்படுத்துங்கள். உங்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வையுங்கள்.

எப்படி மெலிந்த உடல் நோய் நொடிகளுக்கு ஆட்படுகிறதோ, அது போலவே திடமற்ற மனதும் தீய எண்ணங்களுக்கு ஆளாகிறது. ஆகவே, உடலையும் மனதையும் உறுதியானதாக வைத்துக்கொள்ளுங்கள்.

வாழ்க்கையில் கஷ்டங்களையே அனுபவிப்பவர்களின் மனசங்கடத்தை நீக்கி, உற்சாகத்தைத் தரக்கூடிய பகவத்கீதையின் சிலவாக்கியங்களை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"தன்னுடைய முன்னேற்றத்திற்காக நேர்மையான வழியை விட்டு விலகிச் செல்லும் ஒருவன் இகபரம் இரண்டையும் இழக்கிறானல்லவா......?" என்ற அர்ஜுனனின் கேள்விக்கு கிருஷ்ண பகவான் பதிலளிக்கிறார்.

"ஓ...... என் பிரிய சிநேகிதனே ....ஒருவன் தன் வாழ்க்கையில் சிறிதாவது சத்கருமங்கள் அதாவது, பகவத் சிந்தனையோடு கூடிய நற்காரியங்கள் செய்திருந்தால் அவன் தன் மறுபிறப்பில் ஒருபோதும் துன்பப்படுவதில்லை. அவன் பக்தியும் தூய்மையும் பொருந்திய நல்ல குடும்பத்தில் பிறந்து மீண்டும் பக்தியோடு கூடிய நல்ல வாழ்க்கையை ஆரம்பிக்கிறான். ஆகவே, மனதில் பக்தியையும், நலல எண்ணங்களையும் வளர்த்துக்கொண்டால் உயர்ந்த கதியை அடைவது நிச்சயம் ஏக்கத்திற்கும், சந்தேகங்களுக்கும் இடம் கொடுக்க வேண்டாம்...."

### ஞானக்கதிர்

"......ஏனெனில், என்னுடைய பக்தன் என்றும் கஷ்டங்களையும், அழிவையும் அடைவதில்லை என்பதை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லு....." என்று கூறிய அந்த பகவான்தான், நம் அனைவருக்கும் ஆறுதல் அளிக்கிறார். அவரை ஸ்மரித்து, அவரது பாதத்தைப் பற்றிக்கொண்டு சரணாகதி அடையுங்கள். செயல்கள் தானாகவே நடைபெறும். உங்கள் உள் ஆத்மா பரிசுத்தமானது. அதை ஒருபோதும் சோகத்திற்கும், மோகத்திற்கும் உள்ளாக்காதீர்கள்.

நீங்கள் எடுத்த முயற்சி அல்லது காரியம் முடிவு பெறவில்லை என்பதற்காக வருத்தப்படவேண்டாம். இது அநேகமாக மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் ஏற்படக் கூடிய விஷயம்.

எண்ணம், செயல், உடல் என்ற மூன்றிலும் தூய்மையடைந்த மகாத்மாக்களே தாங்கள் மாசற்றவர்கள் என்று உறுதியாகச் சொல்லமுடியும். மற்றவர்களுக்கு தவறுதல் என்பது இயல்பு.

ஆகவே, நாம் கவனிக்க வேண்டிய மிகவும் முக்கியமான விஷயம் எது என்றால், கடவுளிடம் பக்தியோடு இருப்பதை மறவாமலிருப்பதே. ஆகவே, அந்த முயற்சியில் இடையிடையே மனம் பக்தியை விட்டு விலகி தவறி விழுந்தாலும் எழுந்துநிற்க முயற்சி செய்யவேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும் நடக்க ஆரம்பிக்கும்போது பல தடவை கீழே விழுகிறது; தடுமாறுகிறது. ஆனாலும், மீண்டும் மீண்டும் எழுந்து நின்று முயலுகிறது. அதுபோல் எவன் ஒருவன் இடைவிடாது முயலுகிறானோ - தனக்குத்தானே உதவிசெய்து கொள்கிறானோ - அவனுக்கு பகவான் நிச்சயம் உதவுவார். உறுதுணை புரிவார் என்பது உறுதி.

தன் குழந்தை ஒரு பெரிய கொலைகாரனாக மாறினாலும் தாய்க்கு அவனிடம் இருக்கும் அன்பு குறைவதில்லை. அவன்மீது வருத்தம் ஏற்படலாம் கோபம் ஏற்படலாம் அவனைத் திருத்துவதற்காக திட்டலாம். அடிக்கவும் செய்யலாம். ஆனாலும், அவன மீதிருக்கும் அன்பு மாறாமல் தான் இருக்கும். உலகத்தில் உள்ள அத்தனைத் தாய்மார்களின் அன்பை ஒன்றாகச் சேர்த்தாலும் கூட இறைவனின் அனபுக்கு இணையாகாது. இறைவனின அன்பு என்பது அதை விடப்பெரிது. பன்மடங்கு உயர்ந்தது. அவனது கருணை மிகமிக அதிகமானது. ஆகவே, நம்பிக்கை இழக்கவே வேண்டாம். இறைவனின் அருள் நிச்சயம் நமக்குக் கிடைக்கும் என்று நாம் முனனேறிக்கொண்டே போக வேண்டும்.

*நன்றி: ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்.*

## கிண்ணமா! எண்ணமா!

ஒரு சமயம் முனிவர் ஒருவரும் சீடர்களும் காட்டில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். ஒரு திருடன் வந்து, அவர்களிடமிருந்து ஒரு கிண்ணத்தைத் திருடிச்சென்று விட்டான். தூக்கம் கலைந்த முனிவர் நடந்ததை அறிந்தார். தன் சீடர்களை எழுப்பினார்."அவன் எடுத்துக்கொண்டுபோன கிண்ணம் ஓட்டை. பாவம். இந்தநல்ல கிண்ணத்தைக் கொடுத்துவிட்டு வா" என்றார். சீடனும் ஓடிச்சென்று தேடிப்பிடித்து, திருடனிடம் நல்ல கிண்ணத்தைக் கொடுததான். திருடன் மனந்திருந்தி, முனிவரின் சீடனாகிவிட்டான். அன்புப் பிரவாகம் என்பது இதுதான்.

*நன்றி: பக்தி*

## பரீட்சைத் திணைக்களப் பணிகளை மேம்படுத்த பிராந்திய ரீதியில் அலுவலர்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் செயற்பாடுகளை பிராந்திய ரீதியாக ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்து சீரமைப்பதற்கென பரீட்சைத் திணைக்களத்தினால் பொறுப்பான அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த இருவர் பரீட்சைத்திணைக்களத்தினால் நியமிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் செயற்பாடுகளை தற்பொழுது நடைமுறையிலுள்ள ஒழுங்குகள் மூலம் மேற்கொள்ளப்படுவதில் உள்ள சிரமங்களை கருத்திறகொண்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களம் பொதுப் பரீட்சைகளை நடத்தி, மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டு சான்றிதழ்களை வழங்குவதோடு, 10ஆம் 11ஆம், 12ஆம், 13ஆம் தர வகுப்புகளுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டங்களையும் மேற்கொண்டுவருகிறது. பரீட்சைத் திணைக்களத்தில் கடமைப்பொறுப்புக்கள் விரிவடைந்து செல்கின்ற நிலையில் பிராந்திய ரீதியிலான கண்காணிப்புகளை மேற்கொள்வதற்கு பிராந்திய ரீதியிலான அதிகாரிகளின் நியமனம் அவசியம் எனக் கருதியே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

### நினைவு முத்திரை வெளியீடு

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை என்பன வெளியிடப்பட உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் மற்றும் அதன் கொழும்புக் கிளையும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

இந்த முத்திரை மற்றும் முதல் நாள் உறை என்பன எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியிட்டு வைக் கப்படவுள்ளன. நூற்றாண்டு விழா வினை ஒட்டி இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் பாடசாலைச் சின்னம் பொறிக்கப்பட்ட அப்பியாசப் புத்தகங்கள், ரி-சேட் மற்றும் தொப்பி போன்றன விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தேவையானோர் அவற்றைக் கலலூப் பழைய மாணவர் சங்கக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியுமென சங்கச் செய லாளர் செ.செந்தூரன் தெரிவித்தார்.

இதேவேளை, கல்லூரி நூற்றாண்டு விழா சபையின் செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ-9)


## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தின் உணவகத்தில் உணவகப் பண்டங்கள் தயாரிப்பதற்கு முன் அனுபவமுள்ள சமையல்காரரிடம் இருந்து விணணப்பம் கோரப்படுவதால் தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி :- 26.01.2004 ஆம் திகதி, திங்கட் கிழமை நண்பகல் 12 மணி.

க.இராசதுரை
சங்கானை ப.நோ.கூ.சங்கம். (சி-32890)(32-16-17) பொதுமுகாமையாளர்



## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாண மாவட்டம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கும் சித்தன் கேணி சந்திக்குமிடையில் டச் றோட்டுக்கு அருகில் ஐந்து பரப்பு இரண்டு குளி (நில.பர 5 குளி 02) விசாலமுள்ள காணி, வீடும் கிணறும் வான் பயிர்களும் மற்றும் வசதிகளோடும் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்க:

*வரைவு:*
பொன்.பூலோகசிங்கம்,
சட்டத்தரணி. (27418) (26-16-17)

திருமதி நடராஜா ஜெகசோதி,
வட்டு. றோட், சித்தன்கேணி.



அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## மீண்டும் ஆரம்பம்

### ஆட்டிறைச்சிக்கடை

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் பல காலமாக
கோண்டாவில், டிப்போவடி, உரும்பிராய் சந்தை,
புன்னாலைக்கட்டுவன்-பலாலி வீதியில்
ஆட்டிறைச்சிக்கடைகளை நடத்திய
S.A.C ஜுனைட் அவர்களால்

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக் கிணங்க பலாலிவீதி, ஊரெழுவில் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அண்மையில் நாளை (24-01-2004) சனிக்கிழமை மீண்டும் ஆட்டிறைச்சிக்கடை ஆரம்பிக்கப்படவுள்ளது. சுத்தமான ஆட்டுக்கடாய் இறைச்சி விற்பனைசெய்யப்படும்.

☞ சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் கடைதிறந்திருக்கும்.

- S.A.C. ஜுனைட்,
உரிமையாளர்.

(27430) (32-16-17)


## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினபூபதி மகேந்திரன்

வல்வெட்டி, கோணம்போவிலைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி மகேந்திரன் அவர்கள் (2004.01.18) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் (இலங்கை வங்கி), க.மகேந்திரனின் பாசமிகு துணைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற (வதிரி-செல்லையா நீதிவான்) கனகசிங்கம் தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, சோதிசுந்தரம் மற்றும் சிவபாக்கியம், திருமதி இராசபூபதி மகாதேவா ஆகியோரின் சகோதரியும் ஜெயந்தி-றோசா (கனடா), ஜெயக்குமார் (கனடா) ஜெயானந்தன்(கனடா), ஜெயேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அருமை அன்னையும் நந்தவளவன் (அருள்), சறோசா, ஜெயந்தினி, பாரதி ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் நிஷாந்தன், தனுஷா, ஹரிஷன், கோபீசன், நிருஷன் வீணா, ஷர்மிகா ஆகியோரின் அருமைமிகு பேர்த்தியாரும் திருமதி சிவகாமசுந்தரி கைலாயநாதனின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (2004.01.24) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் (இல.நே.) நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*"கோணம்போவில்"*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (27433) (16-17)

தகவல்:
க.மகேந்திரன்.
(கணவர்)

## சாரமரத்திலிருந்து வீழ்ந்து படுகாயம்!

புதிதாக நிர்மாணிக்கப்படும் மாடிக கட்டடத்தின் சாரமரத்தில் இருந்து தவறிவிழுந்த ஒருவர் படுகாயமடைநதார். ஊர்காவற்றுறையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த ரவீந்திரகுமார் புலேந்திரகுமார் (வயது-28) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

## நற்கருணை பணிவாளர் நியமனம்

கத்தோலிக்க மதத்தில் பொது நிலையினருக்கு வழங்கப்படும் அதி உயரிய பணியாகிய நற்கணைப் பணிக்குரிய அனுமதியை யாழ் ஆயர் மேதகு இ.தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை மூவருக்கு வழங்கவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம் பெறவுள்ள நற்கருணைப் பணியாளருக்கான நியமனச் சடங்கில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த ஜே.இ.இராசநாயகம், எஸ்.பெனடிக்றி, ஏ.எஸ்.அகஸ்ரின் ஆகியோர் கருணைப் பணியாளருக்கான அனுமதியை பெறவுள்ளனர். (ஓ-8-15)

## களச்சுற்றுலா

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் சைவநெறி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புராதன ஆலய வழிபாட்டுக் களச்சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலய வழிபாட்டுக் களச் சுற்றுலாவில் இலங்கையில் புராதன ஆலயங்களை தரிசிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும்

களச்சுற்றுலாவில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது பெயர்களை பதிவு செய்யுமாறும்

யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். சுற்றுலாவுக்கான செலவுகளை சம்பந்தப்பட்ட ஆசிரியர் செலுத்த வேண்டும் ஐந்து தினங்கள் நடைபெறும் சுற்றுலாக்காலத்தில் கடமை விடுமுறை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-15)


## SUBRA (14)

சித்தன்கேணி

அரச பாடசாலைகளில் இடைநிலைத் தரங்களில் பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பித்தலுக்கான பட்டதாரிகளைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புக்கள்

By: BRITTO

ஆரம்பம்: 21-01-2004 மாலை 6.00 மணி.
Wen. - Fri. மாலை 6.00 - 8.00 மணி.

(சி-32760) (16-17) அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை. (21-19-13)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 - 01 - 1936



விண்ணில் 26 - 01 - 2001

அமரர் பொன்னம்பலம் துரைசிங்கம்
(புகையிரதப் பகுதி ஓய்வூதியர்)

திதி: வளர்பிறை துதியை (23-01-2004)

அன்பின் இருப்பிடமே பாசத்தின் ஒளிவிளக்கே
இப்பூவுலகில் எம்மை நற்பண்புடன் வாழ
வைத்த அப்பாவே! எங்களைப் பரிதவிக்க
விட்டுச் சென்று மூன்றாண்டுகள் மறைந்தாலும்
உங்கள் திருமுகம் எங்கள்
உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி,
மகள், மகன்,
மருமகன், பேர்த்தி.

இல.400, நாவலர் வீதி,
அரியாலை. (27344)(16-17)

# தரமான கறுவாப் பட்டை இலங்கையில் உற்பத்தியாகுவதால் நல்ல கிராக்கி

## வர்த்தக வெற்றி பற்றி தொழில் அதிபர் ருஹுணுகே விளக்கம்

*கேள்வி:* உங்களை அறிமுகப் படுத்தும் விதத்தில் விவரங்களைக் கூறமுடியுமா?

நான் பிறந்தது தென்பகுதியில் உள்ள ஒரு பின்தங்கிய கிராமத்தில்தான். மத்திய மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ.உயர்தரம் வரை கல்வி கற்றேன். பின்னர் தொழில் ஏதும் கிடைக்காத காரணத்தால் தேநீர் கடையொன்றில் தொழில் பார்த்தேன். சில வருடங்கள் அவ்விதமே கழிந்த பின்னர் தனியாக சொந்த வியாபாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவானது. அதன் பின்தான் எனது ஊரில் ஒரு சிறுதொகையுடன் விறகு வியாபாரம் ஆரமபித்தேன். விறகை வெட்டி அதை நகர்ப் பகுதிக்குக் கொண்டு சென்று விற்கும் வியாபாரத்தில் நான் ஈடுபட்டேன். அந்த வியாபாரத்தில் முன்னேற முடியும் என்ற ஒரு நம்பிக்கையிருந்தது.


*கேள்வி:* அப்படியான ஒரு தொழில் துறையை தேர்ந்தெடுக்க நீங்கள் எவ்வாறு கறுவா வியாபாரத்தில் ஈடுபட்டீர்கள்?

*பதில்:* எனது விடாமுயற்சி காரணமாக அந்த வியாபாரத்தில் சிறிது சிறிதாக சேமித்து வைத்திருந்த ஏழாயிரம் ரூபாயில் கறுவா வியாபாரத்தை ஆரம்பித்தேன்.

*கேள்வி:* ஏழாயிரம் ரூபா பணத்துடன் வியாபாரத்தை ஆரம்பித்த நீங்கள் இன்று அந்த நிறுவனத்தை இவ்வளவு பெரிய நிறுவனமாக்கியது எப்படி?

*பதில்:* நான் இவ்வாறு முன்னேறுவதற்கு முதல் காரணமே எனது மனைவிதான். எனது முயற்சிக்கு அவர் தொடர்ந்தும் ஊக்கம் அளித்தார்; ஆலோசனை வழங்கினார்.

என்னிடமிருந்த ஏழாயிரம் ரூபா பணத்துடன் கறுவா தோட்டங்களுக்குச் சென்றேன். மற்ற வியாபாரிகள் கொடுத்த விலையை விட சற்று அதிகவிலை கொடுத்து நான் கறுவாப் பட்டைகளை வாங்கினேன். இவ்வாறு எனது முயற்சி இருந்தது.





ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 20ஆம் திகதி தோன்றி தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் தொழில் அதிபர் பியதிஸ்ஸ ருஹுணுகே.

பிரபல கறுவா ஏற்றுமதி நிறுவனமான 'ரத்ன பிரடியூசஸ் அன்ட் எக்ஸ்போர்ட்' நிறுவனத்தின் தலைவர் பியதிஸ்ஸ ருஹுணுகே தனது மனைவி ரஞ்சனி செனவிரத்ன சகிதம் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் தமது வர்த்தக முன்னேற்றம் பற்றி விவரித்தார்.

**வர்த்தக ஸ்பெஷல்**

கறுவா உற்பத்தி ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றியும் ருஹுணுகே விவரித்தார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் அலோசியஸ் பெர்னாண்டோவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

வாங்கிய கறுவாவை நகரில் உள்ள கடைகளுக்கு விற்பேன். காலப்போக்கில் அதைக் கொழும்பில் உள்ள வியாபாரிகளுக்கு நேரடியாகக் கொண்டு சென்று விற்றேன். அதில் நல்ல லாபம் கிடைத்தது. தென் பகுதியில் உள்ள பெரும்பாலான தோட்டங்களில் நேரடியாகவே கொள்வனவு செய்து கொழும்பில் உள்ள தொகை வியாபாரிகளுக்கு விற்பதன்மூலம் நலல லாபம் பெறக்கூடியதாக இருந்தது.

அதேநேரம், கறுவாத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பலருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கினேன். இன்று எனது நிறுவனத்தின் கீழ் பலருக்கு வேலை வாய்ப்புக் கிட்டியுள்ளது.

*கேள்வி:* நீங்கள் சர்வதேச ரீதியில் இந்த வியாபாரத்தை எவ்வாறு விஸ்தரித்தீர்கள்?

பதில்: நான் ஆரம்பத்தில் வெளிநாட்டில் உள்ள பல கம்பனிகளுடன் தொடர்புகொண்டு ஏற்றுமதி வாய்ப்புகளை கோரினேன். ஆனால், அந்த நேரத்தில் அவர்கள் என்னை ஒரு பொருட்டாகக் கூட எடுக்கவில்லை. ஆனால், உற்பத்திக்கு சர்வதேச மட்டத்தில் பெரும் கிராக்கி இருப்பது எனக்குத் தெரியும். காரணம் தரமான கறுவாப் பட்டை உற்பத்தியாகும் சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். எனவே, சர்வதேச ரீதியாக சந்தை வாய்பைப் பெறுவதற்கு நான் பெரும் சிரமப்பட்டேன். ஆனால், இன்று எனக்குக் கிடைக்கும் சந்தை வாய்பைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் இருக்கிறேன்.

*கேள்வி:* அப்படியானால் சர்வதேச சந்தையில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறீர்களா?

*பதில்:* ஆம், மாதமொன்றுக்கு இரண்டு கொள்கலன்கள் வீதம் ஏற்றுமதி செய்கிறேன். அங்குள்ள வியாபாரிகள் கோரும் அளவில் அனுப்பி வைத்து அவர்களின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாமல் உள்ளது. காரணம், என்னால் எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்றுமதி செய்ய முடியும். ஆனால், தரமானவற்றை ஏற்றுமதி செய்யவேண்டுமென்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். பொதி செய்யப்படும் ஒவ்வொரு பைக்கெட்டையும் நான் பரிசோதிக்கிறேன். முதலில் தரத்தை உறுதி செய்த பின்னரே அதை ஏற்றுமதி செய்கிறேன்.

- இவ்வாறு தனது வர்த்தகம் பற்றி விவரித்தார் பியதிஸ்ஸ ருஹுணுகே.

★

# சுதந்திரக்கட்சி-ஜே.வி.பி. கூட்டை வரவேற்று ஈ.பி.டி.பி. அறிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து கைச்சாத்திட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தை வரவேற்று ஈ.பி.டி.பி. அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டிணைந்து செயற்படுவதற்காக முன்வைககப்பட்டுள்ள ஐந்தம்சக் கொள்கைத் திட்டம் ஆழமான ஆய்வுக்கும், நுணுக்கமான பரிசீலனைக்கும் உரிய ஒன்றாகும். ஏனெனில், இந்தக் கொள்கைத் திட்டங்கள் கட்சிகளுக்கு இடையிலான புரிந்துணர்வை வளர்ப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அத்துடன், திடீரெனத் தயாரிக்கப்பட்டதாகக் காணப்படவில்லை, நாட்டின் இன்றைய நிலைமைகள் தொடர்பாக கூர்மையான அவதானத்துடன் தெளிவான சிந்தனைகளுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எம்மைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சனைத்தீர்வு தொடர்பாக இங்கு முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மிகுந்த அக்கறைக்கு உரியதாகும். இது விடயத்தில் சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் வெவ்வேறான கருத்துக்களைக் கொண்டிருப்பது போலவே எமக்கு வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. எனினும், இனப்பிரச்சினைக்கு அரசியல் பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்படவேண்டும் எனவும், இப்பேச்சு, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும உள்ளடக்கியதாக அமையவேண்டும் எனவும், பேச்சுக்களின் ஊடாக எட்டப்படும் பொது இணக்கத்தோடு ஒத்துழைக்கத்தயார் எனவும் இரு கட்சிகளும் கூறியிருப்பது வரவேற்புக்கு உரியதாகும்.

மேலும் உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருளாதாரக்கொள்கை, இனங்களுக்குகிடையிலான ஐக்கியம், மனித உரிமைகளை நிலைநாட்டல், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துதல் என்பன தொடர்பாகவும் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் தேசியமுக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். இவைகள் தொடர்பாக தமிழ் பேசும் மக்களின் சார்பாக இவ் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாட எண்ணியுள்ளோம். அத்துடன், தேசியப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுககவும் தொடர்ந்து பாடுபடுவோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

# குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அனுமதியற்ற ஆயுதங்களை வைத்திருப்போருக்கு பொதுமன்னிப்பு வழங்கி உடனடியாக அந்த ஆயுதங்களை அவர்கள் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதி சந்திரிகா உள்துறை அமைச் சின் செயலாளருக்குப் பணித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார் என உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.ஜுனைட் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்தபேட்டியில் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் புரிவோர், போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபடுவோர் மற்றும் வெறுக்கத்தக்க கொடிய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களைப் பொலீஸாருக்கு வழங்குபவர்களுக்கு பரிசில்கள் வழங்கபபடும் முறையினை அறிமுகப்படுத்துமாறும் ஜனாதிபதி தனக்குப் பணித்துள்ளதாக உள்துறை அமைச்சின செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயங்கள் சார்பான பிரேரணைகளுக்கு சட்ட அங்கீகாரம் பெறுவதற்காக தாங்கள் சட்ட வல்லுநர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

கொலைச் சம்பவங்களைப் பொறுத தவரையில் 2002 ஆம் ஆண்டிலும் பார்க்க 2003 ஆம் ஆண்டில் 105 கொலைச் சம்பவங்கள் கூடுதலாக இடம்பெற்றுள்ளன என பொலீஸாருக்குக் கிடைத்துள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 2002 இல் 1282 கொலைச் சம்பவங்களும் 2003 இல் 1387 கொலைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இராணுவத்திலிருந்து விலகி ஓடியவர்கள் மற்றும் சட்டங்களை முறைப்படி கையாள்வதில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவை இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (8)

சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்று கைதான

# 104 இலங்கையர்களை எகிப்து நாடு கடத்தல் கட்டுநாயக்க வந்தடைந்ததும் கைது!

எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்ட 104 இலங்கையர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா வந்தடைந்தனர். விமான நிலையத்தில் வைத்து அனைவரும் விசாரணைக்காக குற்றப்புலனாய்வுப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இத்தாலிக்கும் மற்றும் சில நாடுகளுக்கும் சட்டவிரோதமாகச் செல்ல இலங்கையைவிட்டு கடல்மார்க்கமாகப் புறப்பட்டுச்சென்ற இவர்கள் வழியில் எகிப்தில் வைத்து கைதுசெய்யப்பட்டனர். அங்கு பல வாரங்களாக சிறை வைக்கப்பட்டிருந்த இவர்கள் அனைவரும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

அவர்களை ஏற்றிய எகிப்தின் விசேட விமானம் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. அவர்களுக்குப் பாதுகாப்பாக 90 எகிப்திய பொலீஸாரும் அவ்விமானத்தில் வந்திருந்தனர். விமான நிலையத்தில் அவர்கள் அனைவரும் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# இந்திய மீனவருக்கு எதிராக போராட முன்வாருங்கள்!

## பேசாலை மீனவர்கள் கோரிக்கை

வடமராட்சி,ஜன.23

வடபிராந்தியக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மீனவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து செயற்படவேண்டும்.

மன்னார் பேசாலை மீனவர் சங்கத்தின் தலைவர் சகாயன் மரியதாஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசச் செயலாளர் கே.சூரியகுமாருடன் நேற்றுமுன்தினம் தொலைபேசிமூலம் உரையாடியபோதே அவர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இத்தொலைபேசி உரையாடலின் போது பேசாலை மீனவர் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்திருந்ததாவது:-

இராமேஸ்வரம் துறைமுகத்தில் மட்டும் இந்திய மீனவர்களின் 4 ஆயிரத்து 700 இழுவைப் படகுகள் உள்ளன. இவை எமது பிரதேசத்துக்குள் நுழைந்து தொழில் புரிவதால் வடபிராந்தியக் கடல்வளம் முற்றாக அள்ளிச்செல்லப்படுகின்றது. இதனால், எதிர்காலத்தில் இங்கு மீன்கள் அற்றுபபோகக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

எனவே, இந்திய மீனவர்களின ஊடுருவலைத் தவிர்ப்பதற்கான போராட்டங்களை நடத்துவதற்கு வடக்குப் பிரதேச மீனவர்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசச் செயலாளர் சூரியகுமார் இந்திய மீனவர்களுக்கு எதிராகப் போராடுவதற்கு தாம் எப்போதும் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

(ஜ-8-173)

# சமாதான நடவடிக்கைகள்

"லக்பிம" சிங்கள வாரப் பத்திரிகையில் ஆசிரியர் நிகதமானி டிமெல் வாராந்தம் கற்பனைச் சித்திரம் எழுதிவருகிறார். அண்மையில் அவர் எழுதிய கற்பனைச் சித்திரத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

காரில் நின்று இறங்கிய ரணில் கழுத்துப்பட்டியைத் தளர்த்திக் கொண்டார். அவர் அன்று தனது நாளாந்த வேலையை முடித்துக் கொண்டு நேரதுடன் வீடு திரும்பி வந்திருக்கிறார் என்ற எண்ணத்தில் அவரது மனைவி மைத்திரியின் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது.

'நான் இப்போது 'பண்டு வஸ் நுவர'வுக்குப் போகவேணும்'

ரணிலின் இவ்வார்த்தை மைத்திரியின் மகிழ்ச்சியைச் சிதறடித்தது.

"முக்கியமான உரையொன்று நிகழ்த்த வேண்டியுள்ளது" ரணில் இவ்வாறு மைத்திரியைச் சமாதானப்படுத்த முயன்றார். இதைக் கேட்டும் கேளாதது போல் மைத்திரி வீட்டினுள் சென்றுவிட்டார்.

தனது மனைவியைத் தொடர்ந்து வீட்டினுள் சென்ற ரணில் தனது காரியாலய அறைக்குள் சென்று மேசையில கிடந்த பொருள்களிடையே ஏதோ ஒன்றைத் தேட ஆரம்பித்தார். மேசை மேலிருந்த பொருள்களுள் அவர் தேடிய பொருள் அகப்படவில்லை. அதனால் மேசைலாச்சிகள், புத்தக அலுமாரி என எல்லா இடங்களில் தேடியும் அவரால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மைத்திரி அந்த அறையில் நுழைந்த சமயம் ரணில் கையில் துடைப்பக்கட்டையுடன் கட்டிலின் அடியில் தேடிக்கொண்டிருந்தார். அதைக் கண்ட மைத்திரி அவர் மீதிருந்த கோபத்தையும் மறந்து கைகொட்டிச்சிரிக்க ஆரம்பித்தார். மைத்திரியின் செய்கையால் ரணிலுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"இந்த வீட்டில் எந்த ஒரு பொருளையும் வைத்தெடுக்க முடியாமல் இருக்கிறது"

ரணில் இவ்விதம் கரிசனையோடு எதனைத் தேடுகிறார் என்றறியும் ஆவலில் மைத்திரி ரணிலிடம் பேச்சுக் கொடுத்தார்.

"சமாதான நடவடிக்கைகளப்பா; சமாதான நடவடிக்கைகள்... அதைத்தான் தேடுகிறேன்.

வீட்டுக்கு வெளியில் காத்திருந்த தனது மெய்ப்பாதுகாவலர்களுக்கும் கேட்கும் விதத்தில் ரணில் உரத்த குரலில் சத்தமிட்டார்.

"நான் எவ்வளவோ கவனமாகப் பாதுகாத்து வைத்த பொருள் எனக்குத் தேவைப்படுகிற இந்த நேரத்திலை அகப்படவில்லையே"

ரணில் களைத்துப் போனாலும் தனது தேடுதல் முயற்சியைக் கைவிட்டபாடாயில்லை.

ரணில் 'ரீபோவி'ன் மேலேறி நின்று அலுமாரியின் மேல் அந்தப்பொருள் கண்ணுக்குத் தட்டுப்படுகிறதா என்று பார்த்தார். அந்தவேளையிலும் கூட அவருடைய வாயிலிருந்து முணுமுணுப்புக் குறைந்த பாடாயில்லை.

"பல மாதங்களுக்கு முன்னாலை ஒரு பக்கத்திலை போட்டு வைத்த அது இப்போது கண்ணிலும் தட்டுப்படவில்லையே"

மைத்திரிக்கு ஒரு சந்தேகம்; நெற்றியைச் சுருக்கிக் கொண்டே கேட்டார்.

"சமாதான நடவடிக்கைகள் என்றால் என்னப்பா?"

ரணிலுக்குக் கோபம் உச்சந்தலைக்கேறியது. ஆனாலும் அதை அடக்கிக் கொண்டு சோகம் கலந்த குரலில் கூறினார்....

"உன்னுடைய அப்பாவித்தனத்தை என்னவென்று சொல்ல..கடந்த இரண்டு வருஷ காலமாய் நாங்கள் எப்படிக் காலம் தள்ள முடிந்ததென்று இப்போ நீ மறந்து போய்விட்டாயே?"

ஆனாலும் தனது கணவர் குறிப்பிடும் அந்த விலை மதிப்பற்ற பொருள என்னவென்று மைத்திரிக்கு அப்போதும் கூட புரியவில்லை.

'கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போன கதை போலத்தான் இதுவும்' ரணில் தனது மனைவிக்கு விஷயத்தை புரிய வைக்க முயன்றார்.

"இவ்வளவு காலமும் என்னுடைய கையில் அல்லவா அது இருந்தது" கணவின் பரிதாப நிலையைக் கண்டு, அவருடன் சேர்ந்து தானும் அதைத் தேட ஆரம்பித்தார் மைத்திரி.

வீடு முழுவதும், அலுமாரியிலிருந்த பொருள்களை இழுத்துப்போட்டும், அறைகளில் உள்ள பொருள்களை அங்குமிங்கும் தூக்கிப்போட்டும், குப்பைக் கூடைகளைக் கூடச் சல்லடை போட்டுத் தேடியும் மைத்திரியால் தனது கணவரின் பெறுமதிமிக்க அப்பொருளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மேற்கொண்ட அவர்களின் தேடுதலில் கடைசியில் வீட்டின் வரவேற்பறையின் ஒரு மூலையில் கிடந்த 'அது' ரணிலின் கையில் அகப்பட்டது.

அதன் மேற்புறம் சிலந்திவலை பின்னியிருந்தது. தூசிபடிந்து, பழைய குப்பைக் / காகிதங்கள் மத்தியில் கிடந்த அதைக்கண்டதும் பொத்துக் கொண்டுவந்த அழுகையை ரணிலால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"இங்கேபார் மைத்திரி; குப்பைக்குள் இருந்து இது மறுபிறப்பெடுத்து வந்திருக்கிறதைப்பார்" கண்களில் துளிர்த்த கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டே ரணில் தழுதழுத்த குரலில் கூறினார்.

"உலகம் பூராவுமுள்ள அரசுத் தலைவர்களால் கௌரவிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற கதியைப்பார்"

தனது கணவின் மனநிலை மைத்திரிக்குப் புரிந்த போதிலும், அதுபற்றி எதுவும் மேற்கொண்டு பேச்சுக் கொடுக்காது அப்பொருளைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தார். தாமதமில்லாது வர்ணப்பூச்சைக் கொண்டுவந்து அதனைப் பூசி அழகுபடுத்தி அதற்கு புதிய தோற்றமொன்றை ஏற்படுத்துவதில் மைத்திரி வெற்றி கண்டார்.

"இப்போது இது எவ்வளவு அழகாக ஆகிவிட்டது பார்த்தீர்களா?.. உற்சாகத்துடன் அப்பொருளை ஒரு சுற்றுச் சுற்றிவந்த மைத்திரியின் மனதில் மீண்டும் ஒரு சந்தேகம் உருவாகியது.

"ரணில், இதை இப்போ எதுக்காக புனரமைப்புச் செய்கிறீர்கள்?...

**வியெஸ்ரி**

விற்று விடப்போகிறீர்களா?"

மைத்திரியின் இக்கேள்வி ரணிலுக்கு பலத்த சிரிப்பை ஏற்படுத்தியது.

"உமக்கென்ன பைத்தியமா?"

அந்தச் சமாதான நடவடிக்கையின் பக்கம் பார்த்துக் கொண்டே ரணில் கூறினார்.

"இதனைவைத்து இதற்குப் பொருத்தமான - இந்த நேரத்துக்குப் பொருத்தமான - மற்றொரு நாடகத்தை உருவாக்க வேண்டியுள்ளது. இதை யாவது, நான் கைவிடுவதாவது..."

மைத்திரிக்கு அதன் பெறுமதி இப்போது புரிய ஆரம்பித்தது.



யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மாதகல் புனித தோமையார் முன்பள்ளி நிலைய மாணவர்களுக்கு பாடநூல்கள் மற்றும் விளையாட்டுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியது. யாழ்.சமூக செயற்பாட்டு இணைப்பாளர் கு.வி.நிஷாந்தன் முன்பள்ளி ஆசிரியரிடம் அன்பளிப்புகளை வழங்கிய போது எடுக்கப்பட்ட படம் இது. படத்தில் கிராமசேவையாளர் என். நாகராஜாவும் காணப்படுகிறார். *(படம்: மாதகல் செய்தியாளர்)*

# கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜனி.23

கூட்டுறவு மாதத்தை முன்னிட்டு கூட்டுறவு இயக்கத்தில் பொதுமக்களை இணைப்பதற்கான நடவடிக்கைகளில் மாவட்ட கூட்டுறவுச் சபை ஈடுபட்டு வருகிறது.

இளந்தலைமுறையினரை கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபடுத்தவும் கூட்டுறவுக் கொள்கைகளில் காலத்திற்கு ஏற்ற மாற்றங்களைப் புகுத்தவும், பிரதேச, சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டை ஏற்படுத்தவும் கூட்டுறவு மாதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (ஒ-173)

# கட்டுடை மற்றும் காக்கைதீவு பகுதிகளுக்கு விரைவில் 'பவுஸர்' மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,ஜன.23

கட்டுடை குடியேற்றத்திட்டம் மற்றும் காக்கைதீவு மாதிரிக்கிராமம் ஆகியவற்றிற்கு விரைவில் 'பவுஸர்' மூலம் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான திட்டத்தை யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா மேற்கொண்டுள்ளார்.

மேற்படி இரண்டு பகுதிகளுக்கும 'நீாப்' திட்டத்தின் ஊடாக 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு தண்ணீர் தாங்கி அமைத்து நிலத்தடி குழாய்கள் மூலம குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஒன்று சிபார்சு செய்யப்பட்டது.

ஆனால், வலி.தென்மேற்குப் பிரதேச சபையால் தெரிவு செய்யப்பட்ட திறந்த கிணறுகளில் இந்தத் திட்டத்திற்குக் குடிதண்ணீர் வழங்கப் போதிய ஊற்று இல்லாத காரணத்தால் மேற்படி திட்டம் கைவிடப்பட்டது.

இதற்கு மாற்றீடாக 35 லட்சம் ரூபா செலவில் 'பவுஸர்' கொள்வனவு செய்யப்படவும் -

அதன்மூலம் கட்டுடை, காக்கைதீவு, நவாலி போன்ற பகுதிகளுக்குத் தண்ணீர் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கட்டுடை இடிகுண்டுப்பகுதியில் இருந்து வலிகாமம் தென்மேற்குப் பகுதிக்கு தண்ணீர் வழங்குவதற்கான திட்டம் குறித்தும் ஆராயப்பட்டுவருகிறது.

(ஒ-185)

# பிள்ளைகளின் சேமிப்புப் பழக்கத்தை பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும்!

அச்சுவேலி,ஜன.23

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியைக் கண்காணிப்பதோடு அவாகளிடையே சேமிப்புப் பழக்கத்தையும ஊக்குவிக்கவேண்டும்.

- இவ்வாறு அச்சுவேலி மக்கள வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தமிழ்மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சி அடைந்து செல்கின்றமை எதிர்காலத்தில் எமது பிரதேசத்தில் எதிர்பாராத நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும். காலங்காலமாக கல்வியில் பெருமைபெற்ற யாழ்.மாவட்டம் இன்று கல்வி நிலையில் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைத்தால் போதும் என்ற நிலையில் இருக்காமல அவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கையில் கவனம்செலுத்த வேணடும்.

மாணவர்கள் மத்தியில் பணப் புழக்கம் அதிகரித்துக் கொண்டு செலகின்றது. இது மாணவப் பருவத்திற்கு மேலதிகமான வசதிகளை ஏற்படுத்திக கொடுப்பதோடு, கல்வியின்பால் அக்கறையற்ற நிலைக்கும் இட்டுச்செல்கின்றது.

மாணவர்களை சிறுவயதுப் பருவத்திலேயே சேமிப்புப் பழக்கத்தை வலியுறுத்தி அதனை ஊக்குவிக்க முயற்சியெடுக்க வேண்டும்.

பெற்றோரின் கவனயீனம் பிள்ளைகளை எதிர்மாறான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதோடு, கற்றலிலிருந்து விலகவும் வழிவகுக்கும்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியில் விழிப்புணர்வுடன் செயற்பட்டு பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு தம்மால் இயன்றளவு உதவி வழங்கமுன்வர வேண்டும் - என்றார்.

(ஒ-11)



கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவில் உள்ள அம்மன் கோவில் குளம், வேளாண்குளம் என்பனவற்றின் புனர்நிர்மாணப் பணியை வலி.கிழக்குப் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் க.இராசதுரை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். கிராம அலுவலர் யோசேப் ரெட்ணராசா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.தயாகரன் மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வலி.வடக்கு செய்தியாளர்)*

## செயலமர்வும் கலந்துரையாடலும்

தென்மராட்சி,ஜன.23

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 6,7,8 ஆகிய வகுப்புகளில் சைவநெறிப் பாடம் கற்பிக்கும ஆசிரியர்களுக்கான செயன்முறை வாண்மைவிருத்திச் செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, வலயப் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், ஒழுக்காற்றுப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி [illegible] கல்லூரியில் நடை[illegible].

(ஒ-117)

# தூவல் நீர்ப்பாசன இயந்திரங்கள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,ஜன.23

இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனத்தினின் கோரிக்கையை ஏற்று குடாநாட்டைச் சேர்ந்த 14விவசாயிகளுக்கு, தூவல் நீர்ப்பாசன இயந்திரத தொகுதிகளை வரவழைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்களத்தினின் அனுசரணையுடன் 'இரிடெக்' நிறுவனத்தினர் அனுராதபுரத்தில் இருந்து இவற்றைத் தருவித்து வழங்க உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வெங்காயம், கோவா, மிளகாய், வல்லாரை பொன்னாங்காணி, லீக்ஸ் போன்ற மரக்கறிப்பயிர்களின் நீர்ப்பாசனத் தேவைகளுக்காக இவ்வியந்திரங்கள் தருவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வியந்திரங்களை அனுராதபுரத்தில் இருந்து கொண்டு வருவதற்கான வரியை நீக்கித் தருமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்று பொருண்மியப பொறுப்பாளர் சி.தேவா அவற்றைத் தீர்வையின்றிக் கொண்டு வர அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நிதியை ஹட்டன் நஷனல் வங்கி கடனாக வழங்கி உதவ முன்வந்துள்ளது.

(ஒ-152)

# மினிபஸ் தரிப்பிடத்தில் ஓட்டோ தரிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும்

## மாநகரசபை ஆணையாளரிடம் கோரிக்கை

கொக்குவில்,ஜன.23

யாழ்.பஸ்நிலையத்துக்கு அருகில் மினிபஸ்கள் தரிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஓட்டோக்கள் நிறுத்தப்படுவதைத் தடைசெய்யுமாறு யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் பொ. கெங்காதரன் யாழ்.மாநகர ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

யாழ்.மாநகர ஆணையாளருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பஸ்நிலையத்துக்கு அருகில் மினிபஸ்கள் தரித்து நிற்பதற்கு ஒதுக்கப்பட்ட இடத்திலும் நேரக்காப்பாளர்கள கடமையில் ஈடுபடுவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலும் ஓட்டோக்கள் நிறுத்தப்படுகின்றன. அத்துடன், இப்பகுதிகளில் பழக கடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றால் பயணிகள் பெருஞ்சிரமத்துக்கு உள்ளாகின்றார்கள்.

மினிபஸ்களை தரிப்பிடத்தில் நிறுத்தியவுடன் அவற்றினை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு ஓட்டோ சாரதிகள் மினிபஸ் சாரதிகளை நிர்ப்பந்திக்கின்றார்கள்.

இதனால், தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின்றன. இதனைத் தவிர்ப்பதற்கும் மினிபஸ்களை உரிய இடங்களில் நிறுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்(ஒ-8-76)



மிதிவெடியால் அங்கவீனமானவர்கள் சுயதொழிலில் ஈடுபடுவது தொடர்பான பயிற்சிப் பட்டறை அண்மையில் யாழ். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது.

'சர்வோதயம்' அமைப்பின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டவர்களையும் சர்வோதயத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கே.கனகரட்ணம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# ஸ்ரீ.சு.க. - ஜே.வி.பி. இடையேயான கூட்டு இலங்கை அரசியலில் ஒரு கரும் புள்ளி!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. இணைந்து ஏற்படுத்தியுள்ள கூட்டமைப்பை இலங்கை அரசியலில் ஒரு கரும்புள்ளியாக வரலாறு குறித்துக் கொள்ளும்.

- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ்.-சுரேஷ் அணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் மக்களை மகோன்னத நிலைக்குக் கொண்டுபோகப் போவதாகக் கூறுகின்றன. ஆனால், மக்களை முட்டாளாக்குவதற்காகவே இப்படிக் கூறுகின்றன. இவ்விரு கட்சிகளின் கூட்டானது அடிப்படையில் இரு விடயங்களை முக்கியமாகக் கொண்டதாக அமைகின்றது.

முதலாவதாக, ஐக்கிய தேசிய முன்னணி அரசை அரசியல் சதிப் புரட்சி ஒன்றின் மூலம் கவிழ்ப்பதற்கு கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதி முயற்சி செய்து, அது முடியாமல் தோல்வியுற்றது. இதன் நடவடிக்கையாக ஐக்கிய தேசிய முன்னணி அரசை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிப்பதை நோக்கமாகக் கொண்டு இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இரண்டாவதாக, பேச்சுக்களின் மூலமான இனப்பிரச்சினைத் தீர்வைச் சீகுலைத்து, மீண்டும் ஒரு பாரிய யுத்தத்தின் மூலம் இன்னும் மோசமான இன அழிவை மேற்கொண்டு, அதன் மூலம் தமிழ் இனத்தை மண்டியிடச் செய்வதும் இந்தக் கூட்டின் நோக்கமாகும்.

சிங்கள மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இக்கூட்டுத்தொடர்பாக பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டாலும், இவர்களது அடிப்படைச் செயற்றிட்டம் இவையாகவே அமையும்.



ஜே.வி.பியினர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட காலத்தில் இருந்து தமிழ் இனவிரோத நடவடிக்கையிலும், பேச்சுக்கு எதிரான செயற்பாட்டிலுமே ஈடுபட்டு வந்தார்கள். பாதயாத்திரைகள், பாரிய கூட்டங்கள என எல்லாமே தமிழ் இன விரோத நடவடிக்கைகளாகவே இருந்தன. இவர்களுடன்தான், சமாதானத்தைப் பற்றிப் பேசும் ஜனாதிபதி கூட்டினை ஏற்படுத்தியுள்ளார்.

### முன்நிபந்தனைகள்

"புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். 3ஆம் தரப்பு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே வெளியேற வேண்டும், ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கல் தவிர வேறொன்றும் கொடுக்கக் கூடாது" என்றெல்லாம் புலிகளுடனான பேச்சுக்களுக்கு ஜே.வி.பி. முன்நிபந்தனைகள் விதிக்கின்றது. இதற்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களை அழித்தொழிக்க வேண்டும். இதுதான் இனப்பிரச்சினை தொடர்பாக ஜே.வி.பியின் நிலைப்பாடு.

இதுவரையும் தம்மை மாக்ஸிஸ்டுகளாகக் காட்டிக்கொண்ட ஜே.வி.பியினர் செங்கொடியின் கீழ் கூட்டம் நடத்தியவர்கள், இன்று பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் இலங்கையை வளம் கொழிக்கும் பூமியாகப் போகிறார்களாம். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் எனப் பலமதங்களும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எனப்பலமொழிகளும், பல இனங்களும் வாழும் நாட்டில் பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் நாட்டைக் கட்டி எழுப்பப்போவதாக ஜே.வி.பியினர் கூறுவதன் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்கின்றோம். இந்த நாட்டில் சிங்களமும், பௌத்தமும் மாத்திரமே இருக்கமுடியும். ஏனைய மதங்கள், மொழிகள் எல்லாம் அழிக்கப்பட வேண்டியவை என்பதைத்தானே இவர்கள் கூறுகின்றார்கள்.

சமத்துவம் பேசும் மாக்ஸிஸ்டுகளின் சிறுபான்மை மக்கள் தொடர்பான நிலைப்பாடு இதுதான். இவர்களுடன் தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி கூட்டை உருவாக்கியுள்ளார்.

இவர்களின் கூட்டு இந்த நாட்டை எவ்வளவு கோரமான அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். சமாதானத்தை விரும்பும் எந்த மக்கள் குழுமத்தினரும் இக் கூட்டை ஆதரிக்கமாட்டார்கள்.

எனவே, அமைதியை, சமாதானத்தை விரும்பும் அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளும், இனம், மதம் என்பவற்றைக் கடந்து இணைந்து செயற்படுவதன் மூலம் யுத்தத்திற்கான இவ்வினவாதக் கூட்டமைப்பைத் தோல்வி அடையச் செய்ய வேண்டும். இதன் மூலம் மாத்திரமே இடைநிறுத்தப்பட்ட பேச்சுக்களைத் தொடரமுடியும் என்பதுடன், தமிழ் மக்களிற்கான கௌரவமான தீர்வொன்றினையும் எட்டமுடியும் - என்றுள்ளது. (ஒ-8)

# சமூகச் சீரழிவிலிருந்து விடுபடுவதற்கு ஒழுக்கமும், ஆன்மீகப்பற்றும் அவசியம்!

## குருமுதல்வர் அருட்திரு. நீக்கிலஸ் உரை

கொழும்புத்துறை,ஜன.23

சமூகச் சீரழிவிலிருந்து விடுபடுவதற்கு நாம் ஒழுக்கமானவர்களாகவும், ஆன்மீகப் பற்றுக் கொண்டவர்களாகவும் வாழவேண்டும்.

- இவ்வாறு கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.கொட்டடிப்பகுதியில் அமைந்துள்ள முத்திப்பேறுபெற்ற ஜோசவ்வாஸ் ஆலயத்திருவிழாவில் மறையுரையாற்றிய யாழ்மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்திரு. ஜேநீக்கிலஸ் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது எமது பிரதேசத்தில் கருக்கலைப்பு, சிசுக்கொலை, வன்முறை ஆபாசப்படங்கள், உடைகள் போன்ற சமூகச் சீரழிவுகள் அதிகரித்துள்ளன.

இவற்றிலிருந்து விடுபடுவதற்கு ஒழுக்கமும், கண்ணியமும், மிகுந்த ஆன்மீகப் பற்றுள்ளவர்களாக நாம் வாழ முற்பட வேண்டும்.

தென்னிலங்கையில் அண்மைக் காலமாகத் தலைதூக்கியுள்ள கத்தோலிக்க மதஸ்தலங்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் கவலை தருவனவாக உள்ளன.

மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ பல தீய சக்திகள் சுயலாபத்திற்கென இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன என்று கருதவேண்டியுள்ளது. இவ்வாறான மத சுதந்திரத்திற்கெதிரான அச்சுறுத்தல் நடவடிக்கைகள் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

17ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஒல்லாந்தர் ஆட்சியில் கத்தோலிக்க மதத்தினர் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகினர். அந்த இக்கட்டான காலகட்டத்தில் கோவாவில் இருந்து மாறுவேடத்தில் வந்து பல சவால்களின் மத்தியில் மறை போதனை செய்தார் யோசவ் வாஸ் அடிகள். இவ்வாறான நிலைமை மீண்டும் உருவாகாமல் இருக்க வேண்டும் - என்றார். (ஒ-8-30)

## போட்டிகள் பிற்போடப்பட்டன

தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களிடையே எதிர்வரும் 25ஆம்,26ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த இருபாலருக்குமான மரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 31 மற்றும் பெப்1 ஆகிய திகதிகளில் நடத்தப்படுமென பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-117)

# போக்குவரத்துப் பொலீஸார் அறிவிப்பு

கொழும்புத்துறை,ஜன.23

யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாகப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் வாகனங்களை நிறுத்தவேண்டாம் என்று போக்குவரத்துப் பொலீஸார் அறிவித்துள்ளனர். வைத்தியசாலை வெளிவாசல்களுக்கு எதிர்ப்புறமாக வீதியில் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன என்றும் -

இதனால், நோயாளர்களை ஏற்றி வரும் அம்புலன்ஸ் வாகனங்கள் உட்பட மருத்துவமனைக்கு வரும் வாகனங்கள் போக்குவரத்து இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் -

போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்படும் வாகனங்கள் அப்புறப்படுத்தப்படும் என்றும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-10-30)

# செய்திக்கொத்து

## பிரதேச மட்டத்தில் தையல் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.23

பிரதேச செயலக மட்டத்தில் இயங்கிவரும் மாதர் அபிவிருத்தி தையல் பயிற்சி நிலையங்களுக்கு இந்த ஆண்டில் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பயிற்சி நிலையங்களுக்கும் தலா 25 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்று கிராம அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஒ-10-139)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு இடமாற்றம்

வடமராட்சி,ஜன.23

பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பிரதேச செயலகங்களில் பணியாற்றிய சமுர்த்தி உத்தியோகத்தர்களில் 16 பேருக்கு இந்த ஆண்டில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் 10 பேர் மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கும் 6 பேர் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம்பெற்றுள்ளனர். (ஒ-10-173)

## நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஜன.23

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளில் கட்டட நிர்மாண வேலைகளுக்கென மாகாண விசேட அபிவிருத்தி நிதியிலிருந்து 45 லட்சத்து 50ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாடிக் கட்டடத்தின் 2ஆம் கட்டவேலைக்கு 25லட்சம் ரூபாவும் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் மாடிக் கட்டட வேலைக்கு 15 லட்சம் ரூபாவும் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் கணனி செயற்பாட்டறை அமைக்க ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (ஒ-117)

## நீர்த்தாங்கிகள் அமைப்பு

வரணி,ஜன.23

வரணிப் பிரதேசத்தில் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை, இயற்றாலை அ.மி.த. கலவன் பாடசாலை, கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை, நாற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தண்ணீர் தாங்கிகள் யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன. (ஒ-170)

## நெற்பயிரை அழித்து மரக்கறிச்செய்கை

சண்டிலிப்பாய்,ஜன.23

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை மற்றும் வடலியடைப்பு ஆகிய பகுதிகளில் உள்ள வயல்களில் நெற்பயிர்களை அழித்துவிட்டு மரக்கறிப் பயிர்களை விவசாயிகள் நட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மழையின்மையால் நெற்பயிர்கள் கருகியதை அடுத்தே விவசாயிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கருகிய நெற்பயிர்கள் கால்நடைகளின் உணவாகப் பயன்படுத்தப்பட்டு வருவதையும் காணமுடிகிறது. (10-135)

## பட்டப்பகலில் திருட்டு!

கொழும்புத்துறை,ஜன.23

பாண்டியன்தாழ்வுப் பகுதியில் உள்ள வீடொன்றில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடந்த திங்கட்கிழமை பட்டப்பகலில் திருட்டுப் போயுள்ளன.

புதிய மோட்டார் சைக்கிள், டெக், கையடக்கத் தொலைபேசி, தங்க நகைகள் என்பனவே திருடப்பட்டவையாகும்.

சென்.ஆன்ஸ் ஒழுங்கையில் உள்ள வீடொன்றிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஒ-10-30)

## நூலகம் திறப்பு

சாவகச்சேரி,ஜன.23

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் நூலகம் அண்மையில் தென்மராட்சி வலயக கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவினால் திறந்து வைக்கப்பட்டது இந்த நூலகத்துக்கு 2 ஆயிரம் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

லண்டனின் இருந்து அண்மையில் வருகைதந்த சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.விஜயன் என்பவரே இவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ஒ-10-31)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயம்!

வடமராட்சி.ஜன.23

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் காயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தும்பளை கிழக்கைச் சேர்ந்த கு.கந்தையா (வயது 67), புலோலி தெற்கைச் சேர்ந்த பி.சுபராஜா (வயது 19) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ஒ-10-173)

## ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி.ஜன.21

உசன் இராமநாதன் மகாவித்தியாலய மூன்னாள் ஆசிரியரான கணபதிப்பிள்ளை நினைவாக அவரது பிள்ளைகளால் 75ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச்சாதனங்கள் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இவை தற்பொழுது பாடசாலையின தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. (ஒ-10-117)

## வங்கி அதிகாரி யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்.ஜன.21

மக்கள் வங்கியின் பிரதிப்பொது முகாமையாளர் எஸ்.டபிள்யூ. கமகே அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்றார்.

குடாநாட்டில் உள்ள மக்கள் வங்கிக்கிளைகளுக்கு நேரில் விஜயம செய்த அவர், வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் நிர்வாக விடயங்கள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (ஒ-10-173)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சி.ஜன.21

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோயிற்குடியிருப்பு, மண்டுவில், கல்வயல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவு வழங்கப்படவுள்ள குடும்பங்களின் பெயர் பட்டியல்கள் யாழ்.செயலக புனர்வாழ்வுக் கிளையினால் வங்கிகளுக்கு அனுப்பி வைகக்கப்பட்டுள்ளன. (ஒ-10-117)

## காசோலைகள் அனுப்பிவைப்பு

குருநகர்,ஜன.23

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அலுவலர்களாகப் பணியாற்றியோரின் கொடுப்பனவுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் காசோலைகளாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-10-51)

## சாரமரத்திலிருந்து வீழ்ந்து படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜன.23

மேசன் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் கட்டடத்தின் சாரமரத்தில் இருந்து தவறிவீழ்ந்ததில் தலையில் படுகாயமடைந்தார்.

குருநகர், மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த ஜேசுதாஸன் புலேந்திரன் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஒ-10-6)

## காக்கைதீவுக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஜன.23

கடந்த பல வருடங்களாக மின்சாரமின்றி இருந்த காக்கைதீவு மாதிரிக் கிராமத்துக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதற்கான 7 லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதி மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. (ஒ-10-185)

## வீதி விபத்தில் இளைஞர் காயம்!

தென்மராட்சி,ஜன.23

நுணாவில் பகுதியில் மின்கம்பதுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணம் செய்த இளைஞர் தலையிலும் தோள்பட்டையிலும் காயமடைந்தார்.

இணுவிலைச் சேர்ந்த கல்யாணசுந்தரம் மயூரணன் (வயது 24) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். (ஒ-10-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

0111WP H.K தொடர் இலக்கமுடைய TATA இனக் கென்ரர் - 450 சிவப்பு நிறம் 15000Km ஓடிய நிலையில் விற்பனைக்குண்டு. (மேற்படி வாகனம் பினான்ஸ் அடிப்படையிலானது) தொடர்புகளுக்கு: 265/½, புளுமண்ட் ஸ்ரீட், கொழும்பு-13. T.P.:011 385530, 0777 666 704. (27190)

ஒறிஜினல் இத்தாலியன்வெஸ்பா செல்வ் ஸ்ராட் மொடல் அதிகம் பாவிக்காத ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (27478)

2 மாதம் நிரம்பிய தூய இன டோமன் பிஞ்சர்-அல்ஷேசன் குறெஸ நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஸ்ணமிஷன் பாடசாலை பின் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். நேரம் மாலை 5-6 மணிவரை. (27220)

## காணி விற்பனைக்கு

பழைய பூங்கா வீதி, முதலாம் ஒழுங்கையில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் 2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைகளுண்டு. தொடர்பு: இல.33, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (27466)

K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.ரவீந்திரகுமார், இல.605, K.K.S. றோட், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். T.P. 777 - 14 9729. (27402)

நவாலி டச்சு றோட்டில் வீடுகட்ட உகந்த காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 213/A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (27480)

## வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத் துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத் துறை. T.P.: 0777570279, 0777305533. (C/32826)

திருநெல்வேலி, பலாலி வீதியில் இரண்டரை (2½) பரப்புக் காணியில் ஆறு அறை கொண்ட நாலுசார் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: துரைசிங்கம். 0712-234990, 0112-586549. (27469)

## தவறிவிட்டது

7/8, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெசஜீவ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.763180816V), விசேட அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (27460)

## மணமகன் தேவை

இந்து கௌரவ, அழகான, 38 வயது, இளமைத் தோற்றமுடையவரும் சிறந்த வீடு, பல ஏக்கர் காணிகள், வங்கி வைப்புப் பணத்திற்கும் சொந்தமான மணமகளுக்கு உத்தியோக ஆசிரியர், தகுதியான வியாபார உரிமையாளர் மணமகனை ஒரே சகோதரிக்கு சகோதரர்கள் விரும்புகின்றார்கள். தொடர்பு: விளம்பர இல. 2148, மே/பா உதயன் (தொடர்பு கொள்ளும் திருமணசேவைகட்கு வெகுமதியுண்டு). (27419)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள விலை 44/=, அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் விலை 65/=, 02.02.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடமும் பருத்தித்துறைக்கிளையிலும் பெற்றுக கொள்ளும் Prima குஞ்சுகளுக்கு Prima கம்பனியால் உத்தரவாதம் வழங்கப்படும் (நல்லூர் வீடியோ சென்றா வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(27472)

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

**பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் நகரில் உள்ள கடைகளிற்கு பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கு பாதுகாப்புச் சேவையைப் பொறுப்பேற்று நடத்தக் கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றது. விண்ணப்பங்களை தனிப்பட்ட ரீதியில் தயாரித்து 30-01-2004ஆம் திகதிக்கு முன்பாக *தலைவர், வர்த்தகர் சங்கம், பருத்தித்துறை* என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம்.**

*மேலதிக விவரங்களை சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**வர்த்தகர் சங்கம்,**
**பருத்தித்துறை.** (சி-32575) (26-16-19-21) **- தலைவர்.**

## 8 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்

**எந்திரி P.F.சேவியர் J.P.**

(யாழ். மாநகர முன்னாள் பிரதி மேயர், தமிழ்பேசும் மக்களின் மூத்த தலைவர், பசுந்தரை விளையாட்டுக்கழக ஸ்தாபகர்)

மலர்வு 19-06-1928 உதிர்வு 16-01-2004

**பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்**
**அன்புகாட்டி எம்மையெல்லாம் உயர்த்திவைத்து**
**உளப்பூரிப்படைந்த நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து**
**8 நாள்களல்ல எண்ணாயிரம் நாள்கள் சென்றாலும்**
**தங்களின் நினைவலைகள் எம் நெஞ்சங்களை**
**விட்டு என்றுமே நீங்காது.**

*தங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும் :*

சமூகஜோதி **இளையதம்பி மாசிலாமணி** J.P.,
உளவளத்துணை நிபுணர், யாழ். மாநகராட்சிமன்ற முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், வடமாகாண புற்றுநோய் - எய்ட்ஸ்நோய் தடுப்புச்சங்க பிரதிச் செயலாளர், யாழ்ப்பாணம்,
துணைவி: **சர்வானந்ததேவி,** (தலைவி, அரியாலை மத்தி கி.அ.ச.),
பிள்ளைகள்: **கௌரி, அனுஜி, காயி, றூபாஜி.** (27484) (34-21-19-16)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு குமாரசாமி

(ஓய்வுபெற்ற MLT)

தெல்லிப்பழை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான முருகேசு குமாரசாமி அவர்கள் 21-01-2004 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பதிகளின் அன்பு மகனும் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசு தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற மீனாட்சி, செல்லம்மா, பொன்னம்மா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமுதினி, குமரேந்திரன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவதாஸ், ரூபினி, கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாந், சகானா, சாதனா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ரொறன்டோ, கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.SURENDRAN,
20, BEBBLE NOOD AV.
SCARBOROUGH,
MIV 2A 8, CANADA
T.P.416 3355115. (27476)(21-16-19)

தகவல்:
திருமதி மயில்வாகனம்,
திரு.கா.தேவேந்திரன்
(மைத்துனர்).

### சோமசுந்தரம் அருளம்பலம்

(இளைப்பாறிய அதிபர்)

தளங்கிளப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் அருளம்பலம் நேற்று (22.01.2004) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் (ஆசிரியர்) மற்றும் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் தனராணியின் அன்புக் கணவரும் கேதாரணி, சந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி பொன்னம்மாவின் அன்புச் சகோதரரும் சின்னத்துரை, ஜெகராசா (கச்சேரி, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-01-2004) வெள்ளிக்கிழமை மு.ப.10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (27493)(21-16-19) மனைவி அ.தனராணி

### செல்வி செபஸ்தி ஞானம்மா

யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி செபஸ்தி ஞானம்மா 21.01.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தி - மேரிப்பிள்ளை தம்பதிகளின் மூத்தமகளும் ஆனாச்சி பாக்கியம்மா, ஆசீர்வாதம், மரியதாசன் (முன்னாள் தபாலதிபர்), காலஞ்சென்றவர்களான சநதியாப்பிள்ளை, மேரி மாகிறேட் (மலர்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை யோசேப், வெலிச்சோர், செபமாலையம்மா, புளோறா (பேபி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.01.2004) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*21,மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (27492) (34-19-21-16) செ.ஆசீர்வாதம் (சகோதரன்).

### திருமதி கிருகாம்பாள் சிவானந்தன் (ஆச்சி)

வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி கிருகாம்பாள் சிவானந்தன் (ஆச்சி) நேற்று (22-01-2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் தம்பிப்பிள்ளை சிவானந்தன் (J.P., இளைப்பாறிய சுங்கத் திணைக்கள அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - வள்ளியம்மை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற திருஞானசுந்தரம் மற்றும் இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் திலகவதி, காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சிவமணி பரஞ்சோதி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-01-2004) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.2.00 (பழைய) மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*99,சீனியர் லேன், நாச்சிமார் கோயிலடி.* (23495) (21-19-16) த.சிவானந்தன் (J.P.) (கணவர்)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



*யாழ்ப்பாணம், பாஷையூரைச் சேர்ந்த*
**வென்சஸ்லோஸ் எட்மன் றெக்ஸ்**
அவர்கள் 12.01.2004 அன்று
யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான்
திருமதி S.நந்தசேகரன்
**முன்னிலையில்**
யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரது சேவைகள் மேன் மேலும் வளர மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**குடும்பத்தினர், நண்பர்கள்.**

*பாஷையூர், யாழ்ப்பாணம்.* (27468)(35-21-19-16)

## தேவை

'லாண்ட் மாஸ்ரர்' வாகன சாரதி ஒருவர் உடனடியாகத் தேவை.
தொடர்பு:
**சுஜா போட்டோ அன்வீடியோ**
T.P.3375
36, பாரதி வீதி,
யாழ்ப்பாணம்.
(21-19-16-26) (27487)

## CIIT

**கணனிக் கல்லூரி**
சந்நிதி வீதி, அச்சுவேலி.
*புதிய கணனி வகுப்பு ஆரம்பம்:*
**25-01-2004** 10a.m.

***Diploma Courses***
- Ms Office XP
- DTP
- Hardware

***Certificate Courses***
- Ms Word XP
- Ms Excel XP
- Ms Access XP
- Coreldraw
- Page Maker

**சிறுவர்களுக்கான பிரத்தியேக கணனி வகுப்பு**

Note:-
அலுவலர்கட்கு ஞாயிறு மட்டும்.
(26-21-19-16) (27485)

## THE BARBARA MULVANEY
### Computer Training Centre
*123, Temple Road, Jaffna*

**உலக இணையத்துடன்**
**குறைந்த கட்டணத்தில் பலமணி நேரங்கள் ..........**

அனைத்துத் தரப்பினரும் Internet வசதியைப் பெறும் நோக்கில் மிகவும் குறைந்த கட்டணத்தில் நாம் புதிய கட்டண விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**100/= சந்தாதாரர்**

100/= சந்தாதாரராக இணைபவர்கள் மூன்று மாதங்களுக்கு, மணித்தியாலத்துக்கு ரூபா 30 உடன் இணைய சேவையை பெற்றுக்கொள்ளலாம்.

**300/= சந்தாதாரர்**

இதில் இணைபவர்கள் 15 மணித்தியாலங்களுக்கு இலவசமாக இணைவசதியினை பெற்றுக்கொள்ளமுடியும். இச் சந்தாதாரர் ஒருவருக்கு மணித்தியாலத்திற்கு ஆகும் செலவு20/=மட்டுமே.

**500/= சந்தாதாரர்**

500/= சந்தாதாரராக இணையும் ஒருவர் 30 மணித்தியாலங்களுக்கு இணைய வசதியினை பெற்றுக்கொள்ளமுடியும். இச்சந்தாதாரர் ஒருவருக்கு மணித்தியாலத்திற்கு ஆகும் செலவு 16/=மட்டுமே.

இச்சலுகை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். ☎ T.P.No - 222 5971

## உற்பத்தி அபிவிருத்தி உதவியாளர்கள்

தகமை:
1) க.பொ.த.
(உயர்தரம்) விஞ்ஞானம்
2) க.பொ.த. (சாதாரணம்)
விஞ்ஞான, கணித பாடத்தில் சித்தி.

அனுபவம்:
சான்றிதழ் இணைக்கவும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். நேரில் விண்ணப்பிப்பவர்கள் சனிக்கிழமை 24.01.2004 திகதி மு.ப.9 மணி தொடக்கம் 12.00மணி வரையும் தபால் மூலம் அனுப்புபவர்கள் கீழ் வரும் விலாசத்திற்கு 31.01.2004 இற்கு முன்கிடைக்கக் கூடியதாகவும் அனுப்பிவைக்கவும்.

**சர்வதேச உயிர் நுட்பு**
**BIO TEC INTERNATIONAL**
121/2, பலாலி றோட்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(26-19-16-21 (27458)

# யாழ்.பல்கலை. வணிகத்துறைக்கு மாணவர் அனுமதி போதவில்லை!

## ஒன்றியம் துணைவேந்தருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைக்கு போதுமான மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

யாழ். பல்கலைக்கழக முகாமைத் துவக் கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் துணை வேந்தருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைக்கு மேலதிகமான 19 மாணவர்களுடன் சேர்த்து மொத்தம் 29 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை வணிகத்துறையைப் பொறுத்தமட்டில் போதுமானதாக இல்லை. மேலதிகமாக 19 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதன் காரணமாகவே மாணவர்கள் பதவினை மேற்கொள்ள ஒன்றியம் இணங்கியது.

மாணவர் அனுமதி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்புகொண்டதனூடாக மேலதிக மாணவர்களை அனுமதிப்பதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்துள்ளனர். எனவே, மேலதிக மாணவர்கள் உள்வாங்கப்படும் வரை புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வினையோ அல்லது விரிவுரைகளையோ மேற்கொள்ள வேண்டாமென கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் மேலதிகமாக அனுமதிக்கப்பட்ட 19 மாணவர்களில் சட்டத் துறைக்கு அனுமதிபெற்ற மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். எனவே, அந்த மாணவர்கள் சட்டத் துறைக்குச் செல்லுமிடத்து அந்த வெற்றிடங்களையும் புதிய மாணவர்களை அனுமதிப்பதனூடாக நிரப்பப்படவேண்டும் என்பதனைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

- என்றுள்ளது. (ஓ)



பசுக்கள், இடபங்களைப் பாதுகாக்கும் சமய நிறுவனங்களின் இணையம், யாழ். நகர் சத்திரம் வைரவர் ஆலயத்தில் நடத்திய வருடாந்தப் பட்டிப்பொங்கல் விழாவின்போது இடம்பெற்ற பசுக்கள், இடபங்களின் ஊர்வலத்தில் எடுக்கப்பட்ட படம். (ஒ-15)

# தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் கற்கைநெறி முடித்தவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.23

தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறியவர்கள் தமது நியமனம் தொடர்பாக தனியாக விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் அந்தந்தக் கல்வியியற் கல்லூரிகளில் விநியோகிக்கப்படுகின்றன. இதன்படி வவுனியா மற்றும் யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் பாடநெறியைப் பூர்த்திசெய்தோர் உரிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக இவ்வாண்டிலிருந்து புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி விண்ணப்பப் படிவம் பூர்த்திசெய்து ஒப்படைக்க வேண்டியது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியியற் கல்லூரிகளுக்கு நேரில் சமுகமளிக்க முடியாதோர் சுயவிலாசமிடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றை முழுப் பெயர், பதிவு இலக்கம், பயிற்சிநெறி என்பவற்றைக் குறிப்பிட்டு பீடாதிபதி, தேசிய கல்வியற் கல்லூரி வவுனியா அல்லது யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-8)

# சிறுமியைக் கூட்டிச் சென்று காதுத் தோடுகள் அபகரிப்பு!

கொழும்புத்துறை,ஜன.23

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுமியை ஏமாற்றி அழைத்துச் சென்றவர்கள் அந்தச் சிறுமி அணிந்திருந்த தோடுகளை அபகரித்துச் சென்ற சம்பவம் சமீபத்தில் யாழ்.ஆனைப்பந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

6வயது மாணவி ஒருவர் பகல் 12 மணிக்குப் பாடசலையில் இருந்து தனியே வீடு திரும்பிக்கெண்டிருந்தார். அப்போது அவர் அருகே இருவர் வந்தனர். சிறுமியை அழைத்து வருமாறு, அந்தச் சிறுமியின் தாயார் கூறியதாக அவர்கள் சிறுமியிடம் கூறினார்கள். இதனை நம்பிய சிறுமியை சைக்கிளில் ஏற்றிச் சென்று அவர்கள் யாழ்.நீராவியடியில் மனித நடமாட்டம் குறைந்த இடத்தில் வைத்து சிறுமியின் தோடுகளை அபகரித்தனர். பின்னர் சிறுமியை அங்கேயே விட்டு அவர்கள் தலைமறைவாகினர். தனியாக அழுது கொண்டிருந்த சிறுமியை பொதுமக்கள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். (ஓ-30)

# இன்றும் நாளையும் இடம்பெறும் ஆன்மீக விழிப்புணர்வு உரைகள்

## இராஜயோகினி மீரா நிகழ்த்துகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.23

பிரம்ம குமாரிகளின் ராஜயோகா நிலைய ஏற்பாட்டில் தென்கிழக்காசியப் பிரதேசத்துக்கான பிரமகுமாரிகள் அமைப்பின் இயக்குநர் பி.கே. மீரா இன்றும் நாளையும் ஆன்மீக விழிப்புணர்வு உரைகளை நிகழ்த்த உள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் 'தியானத்தின் மூலம் நன்மைகள்' என்னும் தலைப்பிலும், காலை 10.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் 'மன ஒருமைப்பாட்டுக்கான தியானம்' என்னும் தலைப்பிலும், நணபகல் 12.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் 'விழுமியங்கள் என்னும் தலைப்பிலும் அவர் உரையாற்றுவார்.

நாளை காலை 9.30 மணிக்கு 'சமாதானத்தை வலுப்படுத்தல்' என்ற தலைப்பில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பொதுச் சொற்பொழிவும், மாலை 4.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் 'மன அழுத்தத்தையும் நேரத்தையும் நிர்வ கித்தல்' என்ற தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

இராஜயோகினி மீரா நாகானந்தா, பிரம்மகுமாரிகள் ஆன்மீகப் பல்கலைக்கழகத்தின் கிழக்காசியப் பிராந்தியத்தின் இயக்குநராவார். இவர் தனது விஞ்ஞானமானிப் பட்டப்படிப்பினை இந்தியாவிலுள்ள மைசூர் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தார். இதன் பின்னர் 1968 ஆம் ஆண்டில் பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகத்தின் மைசூர்கிளையில் இவர் இணைந்து கொண்டார்.



அன்று முதல் உலகின் பல்வேறு பிரம்மகுமாரிகள் கிளைகளில் முக்கியமான பொறுப்பான பதவிகளை அவர் வகித்து வந்துள்ளார். தற்போது அவர் தென் கிழக்காசிய பிரம்மகுமாரிகள் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.

1986 ஆம் ஆண்டில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விஜயம் செய்து சர்வதேச வருட சமாதான செயற்றிட்டமான "சமாதான வேண்டுகோளின் கோடி நிமிடங்கள்" என்பதின் சிறப்பான செயலாற்றலுக்கு தேவையானவற்றினை முன்னெடுத்து வந்ததுடன் நியூஜோர்க் நகரில் நடைபெற்ற சர்வதேச நிறைவு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார்.

இவர் "நல்லதோர் உலகத்திற்கான உலக ஒத்துழைப்பு" என்ற செயற்திட்டத்தில் முக்கியமாக பங்கேற்றுள்ளார். இந்த செயல் திட்டமானது ஐக்கிய நாடுகள் சபைக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்ட சமாதான செய்திக்கான முன்னெடுப்பாகும். உலகளாவிய பிரம்மகுமாரிகள் என்பது ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனமானது ஐக்கிய நாடுகள் பொருளாதார, சமூக சங்கத்தின் பட்டியலிலுள்ளது. யுனிசெப் நிறுவனத்தோடு ஆலோசனை வழங்கும் நிலையையும் பெற்றுள்ளது.

பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீக பல்கலைக்கழகம் ஆன்மீக ஒழுக்க விழுமியங்களை கற்பிப்பதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்த ஆன்மீகப் பல்கலைக் கழகம் வேறுபட்ட நம்பிக்கைகளை, பழக்க வழக்கங்களையும் கொண்ட மக்களிடையே 67 ஆண்டுகளாக ஆன்மீக விழிப்புணர்ச்சியை கலந்துரையாடல்கள், கல்வி கருத்துப் பரிமாறல்கள் மூலம் வளர்ச்சியடையச் செய்வதுடன் இலகுவான தியான முறையையும் 85இற்கும் மேற்பட்ட நாடுகளில் கற்பிக்கின்றது. (ஒ-8)

### மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.23

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியால மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் தலையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் பிரதம விருத்தினராகவும், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-6)

### கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஜன.23

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில் ஆண்டு 10, 11 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் சாரணர்கள் நாளை சனிக்கிழமை கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்னர்.

பாடசாலை அதிபர் அ.ஸ்ரீகாந்தன் தலைமையில் மாணவர்கள் திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணை, விசாய ஆராய்ச்சி நிலையம் வானிலை அவதானிப்பு நிலையம், கால்நடை செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம், பாற்பண்ணை மற்றும் பூங்கா என்பனவற்றுக்குச் சென்று பார்வையிடவுள்ளனர். (ஒ-6)

### கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.22

அமரர் க.சுந்தரம் ஞாபகார்த்தமாக உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இரவு 7 மணிமுதல் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணியின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணிக்கு புத்தூர் கலைஒளி வி.க. அணி எதிர் வரணி இளைஞர் வி.க. 'ஏ' அணி.

இரவு 7.30 மணி - இமையாணன் மத்திய வி.க. 'பி' அணி புத்தூர் கலைமதி வி.க. 'பி' அணி.

இரவு 8 மணி - சென்மேரீஸ் வி.க. எதிர் செல்வாபுரம் வி.க. (ஒ-5)

# தென்மராட்சிப் பகுதியில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள் தடுக்கப்படுமா?

தென்மராட்சிப் பகுதியில் சமீப காலமாகவே கொலை, கொள்ளை மற்றும் பாலியல் துன்புறுத்தல் சம்பங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் பொலீஸாரின் இயலாமை, மக்கள் மத்தியில் அதிகரித்துள்ள சமூகச் சீரழிவுச் செயல்கள், சினிமா மோகம், அரசியல் கருத்து முரண்பாடு இவ்வாறு இன்னும் பலவற்றை இவற்றுக்குக் கரணங்களாகப் பல தரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

### கொலைகள்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பல கொலைச் சம்பவங்கள் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் கொல்லப்பட்ட சிலர் அடையாளம் காணப்படவில்லை. அத்துடன், பல இடங்களில் கண்டு பிடிக்கப்படுகின்ற மனித எச்சங்கள் மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை அதிகரிக்கச் செய்துள்ளன. கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் சாவகச்சேரிப் பகுதியில் இளம்பெண் ஒருவர் மர்மமான முறையில் மரணம் அடைந்தார். அதைத் தொடர்ந்து அப்பாதையில் மற்றோர் இளம் பெண் வீதியில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். அதே பகுதியில் 21 வயதான இளம் பெண்ணின் சடலம் கருகிய நிலையில் பற்றைக்குள் கண்டு பிடிக்கப்பட்டது. பன்றித்தலைச்சிப் பகுதியில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். இத்தகைய சம்பவங்களால் தென்மராட்சி மக்கள் அதிர்ச்சியடைந்திருந்தனர். இத்தகைய குற்றச்செயலகள் இந்த ஆண்டும் தென்மராட்சியில் தொடர்கின்றன. அண்மையில் மட்டுவில் கனகன்புளியடிப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 மாதக் குழந்தை, தாய், தகப்பன் வீட்டில் படுக்கையில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இவை மட்டுமல்லாது இச்சடலங்களை உரிமை கோரரிப் பொறுப்பேற்ற சம்பவமும் பெரும் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. குழந்தையினதும், தாயினதும் சடலங்களை உறவினர்கள் கையேற்றனர். தந்தையின் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. இச்சம்பவங்களை நோக்குமிடத்து இவற்றின் பின்னணி என்ன என்பதுதான் தற்போது மக்கள் மத்தியில் எழுந்துள்ள நேள்வி.

இச்சபவங்களுக்கான சூத்திரதாரிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தென்மராட்சிப் பொதுமக்கள் அச்சத்துடன் தமது பொழுதைக் கழிக்கின்றனர்.

### கொள்ளைகள்

திருடர்களின் கைவரிசையும் என்றுமில்லாதவாறு தென்மராட்சியில் அதிகரித்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வரும் திருடர்கள் வீதியில் செல்லும் பொதுமக்களிடம் குறிப்பாகப் பெண்களிடம் நகைகளை அபகரிக்கிறார்கள். வீடுகளில் வியாபாரிகள் வேடத்தில் வருவோர் அங்குள்ள பெறுமதியான பொருள்களைக் களவாடிச் செல்கின்றார்கள். கோயில்களில் வைகக்கப்பட்டுள்ள விக்கிரகங்கள் களவாடபபடுகின்றன. அனுமதியின்றி மணல் ஏற்றுதல், மரம் தறித்தல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளும் தென்மராட்சியில் தாராளமாக இடம்பெறுகின்றன.

**செய்திக்கட்டுரை**
**கொடிகாமம் செய்தியாளர்**

### பாலியல் துன்புறுத்தல்

பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களுக்கும் தென்மராட்சிப் பிரதேசத்தில் குறைவில்லை என்பது மற்றொரு வேதனை. பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர், மாணவனைத் துன்புறுத்தியமை, பாடசாலை மாணவியை முதியவர் பாலியல் இம்சைக்கு உட்படுத்தியமை, ஆசிரியை ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டமை, சீருடையினர் வீட்டில் புகுந்து பெண்களைத் தொந்தரவு செய்தமை எனப் பல பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கைதடி, நுணாவில், சாவகச்சேரி, மீசாலை, வரணி, வேம்பிராய், கொடிகாமம் போன்ற இடங்களிலேயே இச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் தென்மராட்சி மக்கள் அச்சத்துடன் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### பின்னணி என்ன?

இந்தக் குற்றச் செயல்களுக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருப்பது மக்களின் அச்சத்தை அதிகரித்துள்ளது. இவ்வாறான செயல்களைத் தூண்டும் காரணிகளின் பின்னணி குறித்து மக்களிடையே ஐயப்பாடுகள் எழுந்துள்ளன.

இவற்றைக் கட்டுப்படுத்துவற்கு உரிய தரப்பினர் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு தென்மராட்சி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்பதே பலரதும் எதிர்பார்ப்பு.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி சாந்தினி சண்முகலிங்கம் அவர்களின் தாயார் திருமதி சரஸ்வதி இராமலிங்கம் அவர்களின் மறைவை முன்னிட்டு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வி.

(27508)(31-13-12-36)

### பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
### கடல்வள அபிவிருத்தி நிலையம்

**இறால் வளர்ப்பு பற்றிய செயலமர்வு**

பெப்ரவரி 02 ஆம், 03 ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

மீண்டும் நடைபெற உள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(27483)(12-13-36)

பணிப்பாளர்,
கடல்வள அபிவிருத்தி நிலையம், யாழ். பல்கலைக்கழகம்.

## அறிவித்தல்

### கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### கல்வியாண்டு 2003/2004

- 2003/2004 ஆம் கல்வியாண்டில் கலைப்பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு பதிவினை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு 28.01.2004 திகதியன்று காலை 9.00 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.
- கலைப்பீட முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கும், இராமநாதன் நுண்கலைக்கழக இரண்டாம் வருட மாணவர்களுக்கும் (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்), இராமநாதன் நுண்கலைக்கழக மூன்றாம் வருட சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறி மாணவர்களுக்குமான கல்வியாண்டு 2003/2004 ஆம் ஆண்டுக்கான விரிவுரைகள் யாவும் 09.02.2004 திகதிமுதல் ஆரம்பமாகின்றன.
- இராமநாதன் நுண்கலைக்கழக புதுமுக முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 16.02.2004 ஆம் திகதியிலிருந்து நடைபெறும். அவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்
22.01.2004

(சி-32584)(36-12-13)

### ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
### கூட்டுறவு மாதம் அனுசரிப்போம்.
### தை 2004

## நாம் அனைவரும் ஒன்றுபட்டு கூட்டுறவில் இணைவோம்

கூட்டுறவை வளமாக்கி உங்கள் வாழ்வை மேமபடுத்த உங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவராக இணைந்து ஒன்றுபட்டுச் செயற்படுவோம்.

01) கூட்டுறவுக்கும் மக்களுக்கும் உள்ள பெரும் இடைவெளியை குறைப்போம்.

02) மாணவ சமுதாயத்தை கூட்டுறவில் இணைப்போம்.

03) இளைஞர், யுவதிகளை கூட்டுறவில் இணைப்பதன் மூலம் அவர்களது ஆற்றல் மிகு சக்தியை கூட்டுறவு வளர்ச்சிக்கு பயன்படுத்துவோம்.

04) சிறந்த கிராமிய பொருளாதார கலாசார மேம்பாட்டுக் கட்டுமானமாக கூட்டுறவை வளர்த்தெடுப்போம்.

05) எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் கூட்டுறவை வளர்த்தெடுப்போம்.

மேற்படி விடயம் தொடர்பாக எமது சங்கப் பணியாளர்கள், பணிப்பாளர்கள், கிளைக்குழுவினரும் கிராமங்கள், பாடசாலைகள் ரீதியாக அங்கத்தவர்களை இணைப்பதற்காக சகல மக்களையும் சந்திப்பதற்கு சமுகம் தருகின்றார்கள். அவர்களுக்கு சகல ஒத்துழைப்பையும் வழங்கி அனைவரையும் சங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள், கிளைக்குழுக்கள்**
**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.**

(C-32590)(36-12-11)

## மாணவர்களுக்கு அன்பளிப்பு

தென்மராட்சி,ஜன.23

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்துள்ள மாணவர்களுக்கு தியாகி அறக்கொடை நிதியத்தினர் புத்தகப்பைகளையும் கற்றல் உபகரணங்களையும் வழங்கினர்.

கடந்த 16ஆம் திகதி வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் தூல்கோள் விழாவில் கலந்து கொண்ட நிறுவன இணைப்பாளர் செல்லப்பா கமலநாதன் இப்பொருள்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி கோட்ட முதன்மை ஆசிரியர் க. சின்னத்துரையும் வரணி மகா வித்தியாலய முன்னாள் அதிபர் சி. துரைராசா ஆகியோரும் கலந்துகொண்டதாக வித்தியாலய அதிபர் எஸ். தர்மலிங்கம் தெரிவித்தார்.

(ஒ-117)

## சேமிப்பு வைப்புக்கு 10 சதவீத வட்டி

தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் அங்கத்தவர்களின் சேமிப்பு வைப்புக்கு பத்துசதவீத வட்டி வழங்கப்படவுள்ளது.

இந்த் மாதம் கூட்டுறவு மாதமாக அனுஷ்டிக்கப்படுவதையொட்டி சேமிப்பு வைப்பிலிடும் தொகைக்கே இந்த வட்டி வழங்கப்பட உள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் சி. தேவகுமார் தெரிவித்தார்.

(ஒ-117)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜன.23

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களில பணிபுரியும் அலுவலர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப்பட்டறை இன்றுமுதல் யாழ். ஜிரி.இசுற். விடுதியில் நடைபெறவுள்ளது.

"வோகோப் பவுண்டேசன்" ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, மன்னார், அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிராந்திய அலுவலங்களைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொள்வர்.

இவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமை அலுவலகத்தைச சேர்ந்த உயர் அதிகாரிகள் வருகை தரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-)


**லக்ஷ்மி** இணுவில்
அஜித், கார்த்திக், ரோஜா நடித்த
உள்ளத்தில் என்னைக் கொடுத்தேன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்:10.30,2.30, 6.30.(புநே)
(சி-32369) (32)

**ராஜா** யாழ்ப்பாணம்
பிரசாந்த் நடித்த
ஜேஜ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30,9.30 (புநே.)
(சி-32369) (32)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
அர்ஜுன், சிம்ரன் நடித்த
ஏழுமலை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (புநே)
Can You Do A Lote Come
(C-32370) (32)

**நாகம்ஸ்** சுன்னாகம்
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P.இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி
(சண்டியர்) (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(சி-32739)(31)

**லிபேட்டி** அச்சுவேலி
சூரியா, வடிவேலு, விஜயகுமார், ஸ்ரீ வித்தியா நடித்த
உயிர் (ரீல்ஸ்)
தினசரி காட்சி: 3.00, 7.00.
சனிமுதல்
கொஞ்சிப்பேசலாமா
(C-32863) (32)


## கேள்வி அறிவித்தல்
### சாவகச்சேரி பிரதேச சபை

சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான கொடிகாமம் - பருத்தித்துறை வீதியிலுள்ள கடைகளின் வியாபார உரிமையைக் குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் சாவகச்சேரி பிரதேச சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்களையும், கேள்விநிபந்தனைகளையும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 200/= அதற்குரிய பெறுமதிசேர்வரியும் (VAT) மீளளிக்கப்படக்கூடிய கேள்விவைப்புப்பணமாக ரூபா2000/= உம் செலுத்தியதன் பேரில் சபையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை குறித்த திகதிக்கு முன்பதாக தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் "சாவகச்சேரி பிரதேச சபை-சந்தைக் கடைகளுக்கான கேள்விகள்" எனக்குறிப்பிட்டு "செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது அதற்கென வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியிலோ இடுதல்வேண்டும்.

| | |
|---|---|
| சபையால் கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி | : 12.02.2004 |
| சபைக்கு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் இறுதித்திகதி | : 13.02.2004 |
| கேள்விகள் திறந்து பரிசீலித்தல் | : 16.02.2004 காலை10.00மணி |

கேள்வி நிபந்தனைகளும் கடைகளுக்கான ஆகக்குறைந்த கேள்வித் தொகைகளும் கடைகளின் அமைவிட வரைபடமும் கடைகளுக்கான இலக்கங்கள இடப்பட்டு கேள்விப்பத்திரத்துடன் வழங்கப்படும்.

போதிய காரணங்களுக்காக கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை செயலாளருக்கு உண்டு.

*சாவகச்சேரி பிரதேசசபை,*
*கொடிகாமம்.*
*22.01.2004.* (சி-32582)(36-11-12)

கு.ந.பாலச்சந்திரன்
செயலாளர்

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் சரவணபவன் சஞ்சீபன்

4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் சரவணபவன் சஞ்சீபன் 14.01.2004 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சரவணபவன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - (முல்லை வல யம்) - தவமணிதேவி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காண்டீபன் (பொறி யியலாளர் - அமெரிக்கா), சரண்யா (யாழ். பல்லைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகவடிவேல், நடேசபிள்ளை (பிள்ளையார் புடைவை மாளிகை), கணேசபூபன் (லண்டன்), தியாகராசா (அம்மன் வணிகமாளிகை), தர்மலிங்கம் (லண்டன்), பாலச்சந்திரன் (கந்தையா களஞ்சியம்) ஆகி யோரின பெறாமகனும் சீதாலட்சுமி, சந்தானலட்சுமி, குணநாயகி, சந்திரா தேவி, மல்லிகாதேவி ஆகியோரின் மருமகனும் காசிப்பிள்ளை சுபத்திரையின் அன்புப் பேரனும் தவபாலச்சந்திரன் (வரிமதிப்பாளர், கண்டி), நவநீதன் (லண்டன்), பாஸ்கரன் (லண்டன்), யசோதரன் (கனடா), ரவி (இந்தியா) ஆகியோ ரின் மருமகனும் ஜெயராணி, பானுமதி, உமாராணி, மோகனராணி (லண்டன்) ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (24.01.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சித்தப்பாமார்:
க.நடேசபிள்ளை (பிள்ளையார் புடைவை மாளிகை)
க.தியாகராசா (அம்மன் வணிக மாளிகை)
க.பாலச்சந்திரன் (கந்தையா களஞ்சியம்).

*புதுக்குடியிருப்பு*
(சி-32583)(31-36-12-13)

### வைத்திலிங்கம் பூதத்தம்பி
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் பூதத்தம்பி அவர்கள் 21.01.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை அம்மா (ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், ஜெயவதனி, சாந்திக்குமார், சாந்தினி, மதிவதனி, விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜேசுதாசன், புஸ்பம், சிறில், சிறிஸ்கந்தராஜா, மேரிஸ்ரெலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை ஞாயிற்றுக்கிழமை (25.01.2004) பிற்பகல் 4.00 மணிக்கு நவாலியில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் நவாலி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*
(27502)(31-12-13-36)

தகவல்:
பூ.விஜயகுமார் (மகன்)

### தம்பியப்பா தர்மலிங்கம்
**(இணை அதிபர் - மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை)**

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு, யாமாச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா தர்மலிங்கம் 19.01.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியப்பா, நாகம்மா (பிரான்ஸ்) அவர்களின் புத்திரனும் சறோஜாதேவியின் அன்புக் கணவரும், இராசலிங்கம் (ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்), இராசலட்சமி ஆகியோரின் மருமகனும் நாகலட்சுமி (பிரான்ஸ்), தவராசா (ஆசிரியர் - சிலா/வடிவாம்பிகை த.ம.வித்தியாலயம், சிலாபம்), ஜெயலட்சுமி (பிரான்ஸ்), இராசலட்சுமி (பிரான்ஸ்), சாந்தசொரூபன (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் கிருஷ்ணமூர்த்தி (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), பிறேமா (பிரான்ஸ்), திருமதி தவராசா (ஆசிரியர்), ரகுநாதன் (ஜேர்மனி), சத்தியதேவி (U.K), குகநாதன் (நோர்வே), சகிலாதேவி (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25.01.2004) காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாமாச்சந்தி, உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*
(27507)(31-12-13-36)

தகவல்:
மனைவி : சறோஜாதேவி,
மாமன் : இராசலிங்கம்.

### துரையப்பா வேல்சந்திரன்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா வேல்சந்திரன் (இளைப்பாறிய போமன், மின்சாரசபை) அவர்கள் நேற்றுமுன்தினம் (21-01-2004) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கமலநாயகியின் அன்புக் கணவரும் சந்திரரூபன் (Luxmy Press Colombo), சந்திரகோபன் (Malaysia), சந்திரலதா (2nd Batch, J/National College of Education) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-01-2004) பிற்பகல் 02.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உயத்தியோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாச்சியங்காடு,*
*ஏழாலை மேற்கு, ஏழாலை.*
(22799)(36-13-12)

தகவல்:
சி.சிவநாதன் (மைத்துனர்)
லக்கி ஹவுஸ் மானிப்பாய்.

# சுப்பிரமணியம் பூங்கா வளவில் கழிவுகளைக் கொட்டாதீர்

## யாழ்.மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.பிரதான வீதியில் சுப்பிரமணியம் பூங்கா வளாகச் சூழலில் கழிவுப் பொருள்களைக் கொட்ட வேண்டாம் என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் இராமலிங்கம் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுப்பிரமணியம் பூங்கா மற்றும் யாழ். பழைய மாநகர சபை வளாகம் ஆகியவற்றுக்கு அருகில் உள்ள பற்றைகளுக்குள் பொதுமக்கள் கழிவுப் பொருள்களை கொட்டுகின்றனர்.

இதனால் அப் பகுதியில் துர் நாறறம் வீசுவதுடன் சூழல் மாசடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள மற்றும் நகரப் பகுதிகளில் உணவுச்சாலை வைத்திருப்பவர்களே இக் கழிவுப் பொருள்களை அங்கு கொட்டி வருகின்றனர்.

பற்றைகளுக்குள் கழிவுப் பொருள்கள் கொட்டப் படுவதால் யாழ். மாநகரசபை ஊழியர்களால் அவற்றை அகற்ற முடியாத நிலை உள்ளது.

யாழ்.மாநகரசபை பகுதிக்குட்பட்ட இடங்களில் உணவுச்சாலைகள் மற்றும் கோழிப் பண்ணைகள் வைத்திருப்பவர்கள் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டால் குறைந்த செலவில் மாநகர சபை ஊழியர்கள் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து கழிவுப் பொருள்களை அகற்றிச் செல்வார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.23

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளினதும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் தாய்ச் சங்க நிர்வாகத்தின் அவசர கூட்டமொன்று நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை காலை 10.30 மணிக்கு வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (மூ)


# விஷேட கருத்தரங்கு

**இராஜ யோகினி மீரா நாகானந்தா**

(இயக்குநர், பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீக பல்கலைக்கழகம், ஆசிய பசுபிக் நாடுகள்)



**"சமாதானத்தை வலுப்படுத்துதல்"**

(Empowering for Peace)

என்ற தலைப்பில் தன் அனுபவங்களைப்பகிர்ந்து கொள்வார்.

இடம்: "குமாரசாமி மண்டபம்"

யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்

காலம்: தை மாதம் 24ஆம் திகதி, சனிக்கிழமை

நேரம்: மு.ப.9.30 மணி

*தமிழில் நேரடி மொழி பெயர்ப்பு வழங்கப்படும்*

கலை நிகழ்வு: **புஷ்பாஞ்சலி நடனம்**

(வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்)

இந்நிகழ்வில் உங்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன அழைக்கின்றோம்.

**அனுமதி இலவசம**

(சி-32589)(36-11-12)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியர்

**சம்பந்தமூர்த்தி முருகதாஸ் அவர்கள்**

இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் துயரமடைகிறோம. அன்னாரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர்,
ஆசிரியர் கழகம்,
யா /நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பா.

(27505)(36-11-12)

# கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரும், வடமராட்சி வலய தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவருமான திரு.வே.தி.செல்வரத்தினம அவர்களின் பாசத்திற்குரிய சகோதரரான

**திருப்பதி ஞானரத்தினம் அவர்கள**

(வவுனியா, யாழ்ப்பாணம் பிரதி சுகாதார அத்தியட்சகர் காரியாலய ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

22.01.2004 சாவடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலையில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர்,
தமிழர்கல்வி மேம்பாட்டுப்பேரவை,
வடமராட்சிவலயம்.

- (சி-32586)(36-11-12)

# மரண அறிவித்தல்

## திருமதி பகவதி அமுதலிங்கம்

உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பகவதி அமுதலிங்கம் நேற்று (22.01.2004) வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமுதலிங்கத்தின் அன்பு மனைவியும், ஜெயராஜசிங்கம் (நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனியா), துரைசிங்கம் (கனடா), சரஸ்வதி (R.D.R.வவுனியா), பூபாலசிங்கம் (கனடா), மகாலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மாதேவி, தினமணி (கனடா), இரத்தினசிங்கம் (நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனியா), பானுமதி (கனடா), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், ஜெனனி, உஷேந்தன், ஜெயந்தன், சுதாஜினி, பிரணவன், பிரதீபன், பிரசாத், லக்சி, டினேஸ், கிரிசாந்த், பிரியா, பிரியந்தன், மிதுரன் ஆகியோரின் பேர்த்தியும் சியாம், சரண் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2004) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் பண்டாரிக்குளம், வவுனியாவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பண்டாரிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் வீதி,*
*உரும்பிராய்.*
*T.P.: 0777 948245.* (27516)(11-12-36)

தகவல்:
பிள்ளைகள்.

# ஆட்டோப் பயணிகள் இருவர் விபத்தில் பலி!

கொழும்பு,ஜன.23

ருவான் வெல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கேகாலையிலிருந்து அவிசாவளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஆட்டோவும் எதிரே வந்துகொண்டிருந்த லொறியொன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஆட்டோவில் பயணித்த இருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியொன்றைக் கடந்து செல்ல ஆட்டோ முற்படுகையிலேயே இந்த விபத்து நிகழ்ந்ததாக ருவான்வெல்ல பொலீஸார் தெரிவித்தனர். லொறிச் சாரதி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

(ர-4)

# அடிக்கல் நடும் விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஜன23

சுகாதாரத் திணைக்களத்தின் கட்டடங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன யா. சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் கே.ரி. சிவபாதம் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு அடிக்கற்களை நட்டார்.

யாழ் பண்ணைப் பகுதி, சங்கானை மற்றும் வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலேயே புதிய கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ். பண்ணைப் பகுதியில் முன்னா காசநோய் வைத்தியசாலை இருந்த இடத்தில் காசநோய் சிகிச்சை நிலையம் மற்றும் பிராந்திய மருந்துக களஞ்சியம் என்பன அமைக்கப்படவுள்ளன. சங்கானை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டடம் பருத்தித்துறையில் உள்ள ஆதார வைத்தியசாலை மருத்துவர்களுக்கான தங்கும் விடுதிக் கட்டடம், வட்டுக்கோட்டை கிராம வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் தங்குவதற்கான வதிவிடக்கட்டடம் ஆகியவற்றுக்கே அடிக்கல் நடப்பட்டது.

இந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான நிதியினை 'நிர்ப்' நிறுவனம் வழங்கியுள்ளதாக சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். இக்கட்டடங்கள் அனைத்தும் இவ்வருடம் ஒக்ரோபர் மாதமளவில் நிறைவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ம)

# தவசிகுளம் பாடசாலை மீண்டும் ஆரம்பம்

கொடிகாமம்,ஜன.23

தவசிகுளம் றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை மீண்டும் ஆரம்பிககப்பட்டுள்ளது.

இ.யூட்டிஷியன் ஜீவரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையை தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆரம்பித்துவைத்தார்.

இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம தரம் 5 வரையான வகுப்பு உள்ள போதிலும் தரம் 1 வகுப்பு மட்டுமே 35 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை 5வருடங்களுக்கு முன்னர் மாணவர்கள் இல்லாததால் மூடப்பட்டு இந்த வருடம் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-74)

# கசிப்பு வழக்கில் நான்கு பேருக்கு அபராதம்!

யாழ்ப்பாணம்,ஜன.23

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேருக்கு யாழ். நீதிமன்றம் அபராதம் விதித்தது.

இவர்கள் மீதான வழக்கு யாழ். நீதிமன்றில் நேற்று நீதிவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, கொழும்புத்துறையைச சேர்ந்த தர்மகுலராசா- சோதிமலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரான்சிஸ வின்சன் ஆகிய இருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணமும் தலா 3 ஆயிரம் ரூபா தர்மப் பணமும்

உரும்பிராயைச் சேர்ந்த சண்முகம் இந்திரன் அதே இடத்தைச் சேர்ந்த குணசிங்கம் - மல்லிகா ஆகியோருக்கு தலா 20 ஆயிரம் ரூபா தண்டமும் தலா 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. (ஒ-7)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா கனகசபை

**(உரிமையாளர், றீகல் சவுண்ட் / றீகல் வீடியோ)**

ஈச்சமோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட சின்னையா கனகசபை அவர்கள் நேற்று (22.01.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*42/7 கடற்கரை வீதி,*
*ஈச்சமோட்டை.* (27512)(11-12-36)

தகவல்:
சி.அருளானந்தம்
(சகோதரன்)

## வள்ளியம்மை சின்னத்தம்பி

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மை சின்னத்தம்பி நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - காசிப்பிள்ளை ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும் காலஞ்சென்ற பாரதி மற்றும் கௌரி (கொக்குவில், ஞானபண்டிதர் வித்தியசாலை) ஆகியோரின் தாயாரும் சுகுமார்(மக்கள் வங்கி) இன் மாமியாரும் அரவிந், மைவிழி, பிரஹரி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொக்குவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நேற்று நடைபெற்றன.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*39,பிரம்படி ஒழுங்கை,*
*கொக்குவில்.* (27511)(36-11-12)

தகவல்:
மருமகன்

## சின்னையா மார்க்கண்டு (பெயின்ரர் மார்க்)

நாயன்மார்கட்டைச் சேர்ந்த சின்னையா மார்க்கண்டு 21.01.2004 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் இந்திராதேவி, யோகாதேவி, காலஞ்சென்ற பாபுகுமார், சுரேஸ்குமார் (இந்தியா), நீனாதேவி (சுவிஸ்), றூபாதேவி, தயாநிதிதேவி (சுவிஸ்), திவ்வியாதேவி (லண்டன்), சசிக்குமார் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சின்னத்துரை சரவணை ஆகியோரின் சகோதரரும், நாதன், செல்வச்சந்திரன், ரவி, கனகேஸ்வரி, தேவிகாராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இல.346, செம்மணி றோட், நாயன்மார்கட்டில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை (24.01.2004) சனிக்கிழமை 10.00 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்று பூதவுடல் நல்லூர் பரி.யாகோப்பு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.346. செம்மணி றோட்,*
*நாயன்மார்க்கட்டு,*
*யாழ்ப்பாணம்.* (27513)(36-11-12)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி இரஞ்சிதமலர் சோமசுந்தரம்

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இரஞ்சிதமலர் சோமசுந்தரம் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் கொடிகாமம் காலஞ்சென்ற அப்புக்குட்டி சுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதிகளின் மகளும், ஆனைக்கோட்டை காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் மருமகளும், சோமசுந்தரத்தின்(ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர், முன்னாள் பொது முகாமையாளர் உதயன் பத்திரிகை நிறுவனம்) பாசமிகு மனைவியும் வத்சலா (லண்டன்), பிரதீபன் (ஆஸ்திரேலியா), மஞ்சுளா, சியாமளா ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலேஸ்வரன் (லண்டன்), கீதாஞ்சலி (ஆஸ்திரேலியா), பரமேஸ்வரன் (முகாமையாளர், தினக்குரல் வெள்ளவத்தை கிளைநிறுவனம்), சத்தியஜித் (மாலைதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பவானி நாகராசா, செல்வரத்தினம் மற்றும் இராசரத்தினம் (லண்டன்), சுகிர்தமலர், சிற்றம்பலம் (கனடா), யோகரத்தினம் (சிலோன் பிறின்டஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தர்ஷகா, ரம்மியா (லண்டன்), சிவஞ்சன், டிலினி (ஆஸ்திரேலியா), பிரியங்கா, பிரியந்தன், கீதப்பிரியன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***33A1/1, 33 ஆம் ஒழுங்கை,***
*வெள்ளவத்தை.* (சி-32591)(36-11-12)

தகவல்:
சோமசுந்தரம் (கணவர்)
பிள்ளைகள்.

## திருமதி இராமாசிப்பிள்ளை செல்லையா

சுன்னாகம், மலைப்பையைப் பிறப்பிடமாகவும் தையிட்டிபுலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமாசிப்பிள்ளை செல்லையா நேற்று (22.01.2004) வியாழக்கிழமை புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு செல்லையாவின் அன்பு மனைவியும் வேலாயுதபிள்ளை(R.M.P.புத்தளம்), திருமதி இராணிரத்தினம் (இரத்தினபுரி), யோகநாதன்(சுன்னாகம்), சிதம்பரநாதன்(சங்கானை), கதிர்காமநாதன் (உ-அ-அதிபர் பணிமனை உடுவில்), சோதிநாதன் (விளான்), திருமதி இந்திராணி (கிளிநொச்சி), திருமதி பவளராணி (யாழ்ப்பாணம்), இராமநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி செந்திரு குகதாசன் (R.M.P.இரத்தினபுரி), திருமதி செல்லாச்சிப்பிள்ளை, திருமதி சாந்தினி, திருமதி நல்லநாயகி, திருமதி பவளமலர், சுடர் (புனர்வாழ்வு பகுதி - கிளிநொச்சி), பாலசுந்தரம் (கிராம உத்தியோகத்தர், பளை), திருமதி வசந்தா (பாப்பா - சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும். சின்னத்துரை, காசிநாதா, செல்லையா (கிளிநொச்சி) திருமதி அன்னபாக்கியம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இலங்கை வங்கி வீதி,*
*சுன்னாகம்.*
(27515)(36-11-12)

தகவல்:
மகன்: கதிர்காமநாதன்(பப்பா),
மருமகன்: சி.பாலசுந்தரம்,
(கிராம உத்தியோகத்தர் -பளை).

## பொன்னம்பலம் விநாயகமூர்த்தி

பூநகரியைப் பிறப்பிடமாகவும் பரவிப்பாஞ்சான், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விநாயகமூர்த்தி 22.01.2004 அன்று காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் - செல்லம்மாவின் அன்பு மகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், கந்தையா இராசம்மாவின் அன்பு மருமகனும், குமுதினி, சந்துரு, திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், பவாவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், ஞானசேகரம்பிள்ளை (கனடா), பாலச்சந்திரன் (கிராமசேவையாளர், பூநகரி), சீத்தாலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், பாலாம்பிகை, சிவஞானம், சோமசுந்தரம், கல்யாணசுந்தரம், இந்திராணி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிளிநொச்சி*
(27514)(36-11-12)

தகவல்:
திருமதி வி.தையல்நாயகி(மனைவி)
(ஆசிரியர் கிளி.மகாவித்தியாலயம்).

### படுகொலை புரிந்து, படகில் தப்பியோடிய

# சோமவன்சவைக் கைதுசெய்வதற்கு ஜனாதிபதியின் நடவடிக்கை வேண்டும்

## நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. எம்.பி. கோரிக்கை

கொழும்பு,ஜன.23

இலங்கையில் படுகொலைகளைப் புரிந்துவிட்டு படகில் தப்பிச் சென்ற சோமவன்ச அமரசிங்க இன்று இங்கு வந்துள்ளார். பாதுகாப்பு, உள்துறை அமைச்சுக்களுக்குப் பொறுப்பான ஜனாதிபதி இவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புத்தளம் மாவட்ட ஐ.தே.க. எம்.பி. பாலித்த ரங்க பண்டார நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது இவ்வாறு வேண்டுகோள்விடுத்தார்.

இறைவரி திருத்தச் சட்டமூல விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியை தேடித்தர இத்தாலி சென்ற 104 இலங்கையர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர். ஆனால், இலங்கையில் படுகொலைகளைச் செய்துவிட்டு கடவுச்சீட்டைக் கடலில் வீசிவிட்டு படகில் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற சோமவன்ச அமரசிங்க இலங்கை திரும்பியபோது மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை மக்கள் தொலைக்காட்சியில் பார்த்தனர்.

ஒலிபரப்பாளர் பத்மகீர்த்தி உட்பட பல கலைஞர்களையும், பௌத்த பிக்குகளையும் படுகொலை செய்த ஜே.வி.பி. இன்று பஞ்சசீலக்கொள்கைகளைப் பற்றிப் போதிக்கின்றது.

நூற்றுக்கணக்கான பஸ்வண்டிகளையும், ரயில்களையும் தீயிட்டுக் கொளுத்தி பொருளாதாரத்தை சீரழித்தவர்கள் இன்று தேசிய பொருளாதாரம் குறித்து பாடம் நடத்துகின்றனர்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# படைகளில் சிறுவர்கள்: யுனிசெவ் அறிக்கை

கொழும்பு,ஜன.23

விடுதலைப் புலிகள் 2003ஆம் ஆண்டு 709 சிறுவர்களைத் தமது படையில் சேர்த்துள்ளனர் என்று 'யுனிசெவ்' அறிவித்துள்ளது.

'யுனிசெவ்' நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

புலிகள் இயக்கத்தில் தற்போது 1,301 சிறுவர்கள் உள்ளனர் என்றும் - இதுவிடயம் குறித்துக் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் - தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த ஆண்டு நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய சிறுவர்கள் 202 பேரை புலிகள் விடுவித்துள்ளனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 50 ஆயிரம் சிறுவர்கள் வரை பாடசாலை செல்வதில்லை. இந்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு சிறுவர்களை படையில் சேர்ப்பதை புலிகள் முற்றாக நிறுத்துவதோடு தமது படையில் உள்ள சிறுவர்களையும் விடுவிக்க வேண்டும்.

- இப்படி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உயர் தொழில்நுட்ப நிறுவனம் பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரக்காணி பெறுதல் மற்றும் நிறுவனத்தை அபிவிருத்தி செய்தல் பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை இலங்கை தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு நடைபெறும் இக்கலந்துரையாடலில் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் த.இராஜரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.

கூட்டத்தில் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் கல்வியினை மேம்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (ம-6)

## உண்மையான...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

வித்து வரும் கருத்துக்கள் அவர்கள் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தில் இருக்கின்றன என்ற உண்மையைப் புலப்படுத்துபவையாக உள்ளன. வெளிநாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்வதை முற்றாக நிறுத்தவேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை ஜே.வி.பி. தலைவர்கள் தெரிவித்து வருகிறார்கள். ஆனால், நாட்டின் பொருளாதாரத்தில் 20 சதவீதம் இறக்குமதியிலேயே தங்கியுள்ளது.

இறக்குமதியை நிறுத்துவது என்பது நாட்டை பெரும் நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடாக அமையும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## சகல மாகாண...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

அவசியமாகும் இச்சட்டத்திருத்தத்திற்கு அரசாங்க கட்சியும் எதிர்க்கட்சிகளும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

எனவே, இத்திருத்தச் சட்டமூலத்தை அடுத்த மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பாடசாலை விடுமுறைக் காலம் ஏப்ரல் மாதத்தில் வருவதால் அக்காலத்தில் தேர்தல்களை நடத்தினால் பாடசாலை நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படமாட்டாது என்பது அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாகாண சபைகளைக் கலைக்க முதலமைச்சர்களின் இணக்கம் அவசியமாகும். மத்திய மாகாண சபையைக் கலைக்க அச்சபையின் முதலமைச்சர் ஏற்கனவே இணக்கம் தெரிவித்திருக்கிறார் என அறியப்படுகிறது.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு அமைய மாகாண சபைகளின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்த ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகவில்லை என்று வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளரிடம் கடந்த வாரம் தெரிவித்திருந்தனர்.

மாகாண சபைத் தேர்தல்கள் முன்கூட்டியே விரைவில் நடைபெறவிருப்பதால் வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவது தொடர்பான விபரங்களை தேர்தல் ஆணையாளர் கோரியிருக்கிறார். இந்த விவரங்களை எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்புமாறு சகல மாவட்டச் செயலாளர்களையும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கோரியிருக்கிறார்.

கிராமசேவை அதிகாரிகளின் அறிக்கையின் அடிப்படையில் வாக்களிப்பு நிலையங்களின் பட்டியலைத் தயாரிக்குமாறு தேர்தல் ஆணையாளர் ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

1,200 வாக்காளருக்கு குறைவாக இருப்பின் ஒரு வரிசையுடனான வாக்களிப்பு நிலையமும் 1,200 வாக்காளருக்கு கூடுதலாக இருப்பின் இரு வரிசைகளுடனான வாக்களிப்பு நிலையமும் அமைக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

வாக்காளரின் எண்ணிக்கை மூவாயிரத்துக்கும் கூடுதலாக இருப்பின் மற்றொரு வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

# இன்றைய கொழும்பு...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

நாடுகளில் ஒன்றான ஜப்பானின் - விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி தற்போது இலங்கை வந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசிய அவர், இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கிறார்.

நேற்று விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்கு சென்ற அவர் அங்கு புலிகளின் சமாதானச் செயலகத்தில் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

அவருடன் கொழும்புக்கான ஜப்பானின் தூதுவர் அகியோ சூடா, தூதரக இரண்டாவது செயலாளர் கென்ஜி மியட்டா, தூதரக அலுவலர் எஸ்.டி வோட்டா, ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் தென் மேற்காசியப் பிரிவின் இயக்குநர் டக்கியோ யமடா, அப்பிரிவு அலுவலர் றியோசுகி கமோனா ஆகியோரும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தனர்.

இன்றைய கொழும்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி அகாஷி விடுத்த அழைப்பை ஏற்கமறுத்த தமிழ்ச்செல்வன், அதற்கான காரணங்களை அகாஷிக்கு விளக்கினார்.

யுத்தநிறுத்தம் மற்றும் சமாதான சூழ்நிலைகளின் பயனை நாட்டின் ஏனைய பகுதி மக்கள் நன்கு அனுபவிக்கின்றார்கள் என்பதையும், யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழான தனது கடப்பாடுகளை இலங்கை அரசு நிறைவேற்றாததால் சமாதானச் சூழ்நிலையின் பயனை வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் மட்டும் அனுபவிக்க முடியாமல் உள்ளனர் என்பதையும் அகாஷிக்கு தமிழ்ச்செல்வன் எடுத்துரைத்தார்.

இதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மன விரக்தியை ஜப்பானின் விசேட தூதுவருக்குச் சுட்டிக்காட்டிய அரசியல்பொறுப்பாளர், தேசியப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண முயற்சி எடுக்கப்பட்ட சமயங்களில் எல்லாம் தென்னிலங்கையில் ஒரேவிதமாக மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான குழப்ப - நடவடிக்கைகளின் போக்கையும் எடுத்துரைத்தார்.

ஆனால், இம்முறை சர்வதேச சமூகம் இவ்விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டதால் அதில் தமிழ் மக்கள் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர் என்று குறிப்பிட்ட அவர், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகாரப் போட்டி மற்றும் நெருக்கடியின் பின்னர் உருவான புதிய கூட்டமைப்பால் தமிழ் மக்கள் கொண்டிருந்த அந்த நம்பிக்கையெல்லாம் அடியோடு தகர்ந்து போய்விட்டதாகவும் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வனுடனான நேற்றைய சந்திப்புக் குறித்து அகாஷி தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் இலங்கையில் புதிய சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. சர்வதேச சமூகமும் அது குறித்து கவலை கொண்டுள்ளது. இவ்விடயம் குறித்து தமிழ்ச்செல்வனுடன் நான் கலந்துரையாடினேன். ஆனால், அவற்றின் விவரங்களை வெளியிடமுடியாது.

முக்கிய இரு தலைவர்களான ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் வேறுபாடுகள், சு.க. - ஜே.வி.பி. இடையிலான புதிய கூட்டமைப்பு உருவாக்கம் ஆகியவற்றின் பின்னணியில் தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் இவ்விடயங்கள் சமாதான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பது குறித்தும் நாங்கள் இருவரும் பரிசீலித்தோம்.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புக் கோரி கடந்த 19ஆம் திகதி தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரை குறித்து கருத்து வெளியிட்ட நான், கொழும்பு அரசியல் நிலைமை குறித்து உதவும் நாடுகள் சமூகமும் கவலை கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டினேன்.

வடக்கு - கிழக்கில் ஜப்பானின் உதவியோடு மேற்கொள்ளப்படும் திட்டங்களின் நிலைமைகளையும் நாம் மீள் பரிசீலனை செய்தோம்.

கொழும்பில் உள்ள குழப்பமான அரசியல் நிலைமை காரணமாக, இன்று கொழும்பில் நடைபெறும் உதவும் நாடுகளின் மீளாய்வுக் கூட்டத்தில் தாங்கள் கலந்துகொள்ளமுடியாமல் இருப்பதாக தமிழ்ச்செல்வன் எனக்குத் தெரிவித்தார்.

மீள்குடியேற்றம், புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்க முடியாத இக்கட்டில் வடக்கு - கிழக்கு மக்கள் தவிப்பது குறித்து சர்வதேச சமூகம் ஆழ்ந்த கவலையும் கவனமும் கொண்டிருக்கின்றது - என்றார் அகாஷி.

வடக்கு - கிழக்குக்கென விசேடமாகத் திட்டமிடல், அபிவிருத்திச் செயலகம் ஒன்றைப் புலிகள் ஸ்தாபித்திருப்பதை வெகுவாகப் பாராட்டிய அகாஷி, மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகள் தொடர்பாகப் புலிகளின் திட்டமிடல், அபிவிருத்தி நோக்குகளை விளக்குவதற்கு உதவும் நாடுகள் சமூகத்தை கிளிநொச்சிக்கு அழைத்துக் கலந்துரையாடல் நடத்திய புலிகளின் செயற்பாட்டையும் விதந்துரைத்தார்.

## பதவி நீக்கி...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தலில் தற்பொழுது இருப்பதைவிட 20 அல்லது 30 கூடுதல் ஆசனங்களைப் பெறமுடியும் என்பது தனது பெரும் நம்பிக்கையாகும் எனவும் பிரதமர் கூறினார்.

சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பு குறித்து பின்வரிசை எம்.பிக்கள் பிரதமருடன் பேச்சு நடத்தினர்.

இக்கூட்டமைப்பின் பின்னர் பிரதமரை பதவி நீக்கம் செய்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்த ஏற்பாடுகள் இருக்கின்றன என்று தகவல்கள் கூறுவதாக எம்.பிக்கள் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரதமர் மேலும் கூறுகையில், பிரதமர் பதவியிலிருந்து என்னை அகற்றிவிட்டு பொதுத் தேர்தலை நடத்துவதைப் போல வேறு ஆதாயம் இருக்க முடியாது. எந்த ஒரு தேர்தலுக்கும் முகம் கொடுக்க ஐ.தே.முன்னணி தயாராகவே இருக்கிறது.

பிரதமர் டட்லி சேனநாயக்க ஒரு கொத்து அரிசியை இலவசமாக வழங்கியும் தேர்தலில் தோல்வியடைந்தார். ஆயினும், ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அரிசிக் கூப்பனை வெட்டியும் தேர்தலில் வென்றார். பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதன் மூலம் மட்டும் தேர்தலில் வெற்றி பெறமுடியாது என்று குறிப்பிட்டார்.

A/L-2005
LOGIC
குறியீட்டு அளவையியல்
எஸ்.எஸ்.மனோகரன்
★ அனைத்துப் பகுதிகளும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
★ நேர அட்டவணைக்கு நேரில் வரவும்.
ஆரம்பம: 24.01.2004 நாளை சனி 2 மணி.
BEACON யாழ் நகர் வெலிங்டன்சந்தி.
(27356)

Lingam master - swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.
(26642)(36-14-16)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2005 இரசாயனம்
சேதன இரசாயனம் (ORGANIC)
திரு N.மகேஸ்வரன் B.Sc. (Hons)
ஆரம்பம்: 24.01.2004
சனி 5.30 p.m.
(C-32886)

New Stock Now Available
மிக மிக மலிவு விலையில்
Dell, Compaq கணனிகள் PII, PIII தரத்தில் உங்கள்
பணத்திற்கு மிகப்பெறுமதியுடன்
ரூ 15000/- லிருந்து
ரூ 15000/- லிருந்து
மேலதிக விபரங்களிற்கு
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P:2222674

பணியாளர்கள் தேவை
பத்திரிகை மடித்தல்
ஏற்புடையவர்கள் தேவையான ஆவணங்களுடன் இன்று (23.01.2004) வெள்ளி காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.
மனிதவள முகாமையாளர்,
உதயன் மனிதவள சேவை.
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-32587)

கணக்கீடு
A/L 2005
வங்கி இணக்கக்கூற்று
ஆரம்பம்: 24.01.2004 சனி
நேரம் 11.00 (ப.நே.)
Bலு.B.முகுந்தன் B.B.A.(Hons)
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(27102)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.